# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்



**திலீபன் நினைவ...**

தேசியத்தலைவர்
வே. பிரபாகரனின்
குறிப்புகள்

**"காட்டு அன்னங்கள்"**

பிரம்மஞானி எழுதிய
சீனக்கலாச்சாரப்
புரட்சிபற்றிய புதியநோக்கு

**விண்ணிலிருந்தாலும் ...**

ஈழநாதம் - வன்னிப்பதிப்பு
சிறுகதைப் போட்டியில்
முதல் பரிசு பெற்ற
சிறுகதை

புதுவை இரத்தினதுரை
ச. வே. பஞ்சாட்சரம்
ஆகியோரின் கவிதைகள்

இன்னும் பல அம்சங்கள்

**புரட்டாதி 1994**
**விலை 20/=**

புழுதி விதைப்புக்குப் பின்னர்
வயலில் நிற்கும் உழவனைப் போல...
வானத்தைப் பார்த்தபடி நம்மில் சிலர்.
"புரட்டாதிச் சனி" விரதத்திலன்று
காகத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பவர் போல்...
இன்னும் சிலர்.
"மகாவலி கங்கை" ஓடிவந்து
"வழுக்கியாற்றில்" விழுமென்ற
நம்பிக்கையுடன் வேறும் சிலர்.
பார்க்க அழகாக...
மரங்கள் பூக்கத் தொடங்கியுள்ளன.
தலையில் சூடத்தான் சரிவருமா?
பட்டத்துக்குக் கட்டிய வாலாகத் தொங்கும்
மின்சாரக் கம்பிகள்
எப்போது ஒன்றாகி உயிர்ப்புக் கொள்ளும்.
புகைவண்டியோடிய தண்டவாளப் பாதையில்
இன்று அகதிகள் குடியிருப்பு.
என்று இவையெல்லாம் ஒன்றாகி
"கூ"வென்ற இரைச்சலுடன் "யாழ்தேவி" ஓடிவரும்?
"ஆனையிறவுப் பாதை" திறந்தவுடன்
ஒருமுறை "கதிர்காமம்" போக வேண்டும்.
பழைய கிழடொன்றுக்கு இதுதான் பல்லவி.
இனிமையான கனவுகளுடன்
காலையில் "தினசரிகள்" விற்பனையாகின்றன.
எல்லோரும் இணைப்பதுபற்றியே மூச்சுவிடுகின்றனர்.
ஏன் பிரிக்கப் புறப்பட்டோம்?
அதை மறந்தால்...
இனியும் உதை விழலாம்.



— மாலிகா

# வெளிச்சம்

புரட்டாதி 1994
இதழ் 29

யுத்தம் கொடுமையானது.
யுத்தம் குரூரமானது.
யுத்தம் குருதி சிந்துவது.
யுத்தம் மனித நாகரீகத்துக்கு மாசு தருவது.
சந்ததித் தொடராக யுத்தம் நீளக் கூடாது.
இந்த யுத்தம் எங்கு நடந்தாலும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

மேலே உள்ள அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மை. அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடிய சத்திய வார்த்தைகள் என்பதை வெளிச்சம் விளங்கிக் கொண்டுள்ளது. ஆனால்;

பலம் பொருந்திய ஒருவனிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு அவன் அதிகார மமதையில் மற்றவர்களை புல்லென நினைத்து ஆட்சி புரியும் போது, அடக்கப் படுபவர்கள் தங்களுக்கு நீதி கேட்டு நிமிரும் போது "சீறிடும் புரட்சி" யுத்தமாக உருவெடுக்கிறது.

அந்த யுத்தம் தர்மத்தின் வகைப்பட்டு அதர்மத்தை அழிக்கிறது. இப்படி நோக்கும் போது தான் ஈழத்தமிழரின் யுத்தம் நீதியின் பக்கம் நிற்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். தமிழீழம் இன்று வரை நடத்திவரும் யுத்தம் தர்மயுத்தம். எமக்கு நீதி வழங்குங்கள் என்று எல்லா வழியிலும், கேட்டலுத்த பின்னர் எஞ்சியிருக்கும் ஒரேவழி ஆயுதப் போராட்டமே என்றுணர்ந்து அந்த வழியிலே.. ஈழத் தமிழர் அடியெடுத்து வைத்தனர். தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளை சுதந்திரத்துக்கு தத்தம் பண்ணிக் கொடுத்தனர்.

விடுதலைப் புலிகள், விடுதலைக்கு தங்கள் உயிர்களை விலையாகக் கொடுக்கத் தொடங்கினர்.

"இந்த தர்மயுத்தம் கூட சாவுகளைத்தானே தருகிறது அதையும் நிறுத்திக் கொள்ளலாம் தானே" என்று ஒரு குரல் அன்றிலிருந்து இன்று வரை அடிக்கடி கேட்கிறது.

அப்படியா? அதையும் நிறுத்திக் கொள்ளலாம் ஆனால் போராடும் எம்பூமியின் நியாயக்குரலுக்கு சிங்கள ஆட்சியாளரின் பதிலென்ன?

நீதி கேட்டு நிமிர்ந்த தமிழ் மக்களுக்கு அவர்கள் வழங்கும் தீர்ப்பு என்ன?

அதை தெளிவாக முன்வைக்கும் போதுதான் தமிழ் மக்கள் தகுந்த பதிலை வழங்குவார்கள்.

"பிரபாகரனின் இடுப்பிலுள்ள குத்துவாளைக் கொண்டுவந்து எனது அத்தாணி மண்டபத்தில் அழகுக்கு வைப்பேன்" என்றான் ஒருவன்.

"முன்று மாதத்தில் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து தமிழர் பூமியில் சிங்களக் கொடியை ஏற்றி வைப்பேன்" என்றான் இன்னொருவன்

"நாங்கள் அரிசி அனுப்பாவிட்டால் தமிழர் மண்ணைத்தான் சாப்பிட வேண்டிவரும்" என்று மமதைக் குரல் எழுப்பினான் மற்றொருவன்.

"இருபத்தி நான்கு மணி நேரத்தில் புலிகளை இல்லாதழிப்போம்' என்று சொல்லி வந்து தோற்றுப் போனது பக்கத்து நாட்டுப் படைகள்.

இத்தனைக்குப் பின்பும் போர் மூலம் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணப் புறப்படுபவர்களை உலகம் பார்த்து ஒரு தரம் சிரித்துக் கொள்ளும்.

இன்று புதிய சூழ்நிலையொன்று ஸ்ரீலங்காவில் உருவாகியுள்ளது. திருமதி சந்திரிகா குமாரரணதுங்காவை 'அநியாயமான போருக்கு அரசியல் தீர்வு காணுங்கள்' என்று சிங்கள மக்கள் தேர்தல் மூலம் அதிகாரமளித்து அரசுக்கட்டில் ஏற்றியுள்ளனர்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடப்பவை நல்லவையாக அமையட்டும் என்று, தமிழீழ மக்களும், விடுதலைப்புலிகளும், எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களும் இதய சுத்தியுடனும் உண்மையான உள்ளத்துடனும் பேசுவோம் வாருங்களென்று வாசலில் வரவேற்கக்காத்திருக்கின்றனர்.

மின்சாரம், நெடுஞ்சாலை, புனாவாழ்வு என்பதெல்லாம் சுதந்திரத்துக்கும், விடுதலைக்கும் ஒப்பாக மாட்டாது.

சோற்றுக்காகவும், சோக்குக்காகவும், இன்னொருமுறை தமிழீழம் ஏமாற மாட்டாது. எமது பிரச்சனையை புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் எங்கள் விடுதலைக்காக கொடுத்த விலையின் உச்சத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்களப் படைகளாலும், ஏவிவிட்ட கூலிப்படைகளாலும் இந்த மண் பட்ட வேதனைத் தழும்புகளுக்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

இனி எக்காலமும் இன்னொரு போராட்டம் உருவாகா வண்ணம் உரிமைகள் வழங்கப்படுவதோடு, அதை உறுதிப்படுத்தவும் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இழந்துபோன நம்பிக்கையை நல்ல சமிக்கைகள் மூலம் கட்டியெழுப்ப வேண்டும். இத்தனையும் சாத்தியமாகுமானால், இந்த ரத்தம் சிந்தும் யுத்தம் இங்கு தேவையற்றுப் போகும். குருதி சொரியும் இந்தப் போராட்டத்தை குழி தோண்டிப் புதைத்து விடலாம்.

தமிழர் பக்கத்தில் எந்தத் தடைகளும் இல்லை.


கைகளில் வெற்றிலைத் தட்டுடன் சமாதானத் தூதுவரின் வருகைக்காக வழிபார்த்திருக்கின்றோம்.

சகோதரி சந்திரிகா என்ன பதில் தருவார்?

எல்லோரையும் போலவே நல்ல பதில் தருவார் என்று வெளிச்சம் காத்திருக்கிறது.

# தியாகி திலீபன்

## ஒரு இலட்சிய நெருப்பு



தமிழீழத் தேசியத் தலைவர்
திரு வே. பிரபாகரன் அவர்கள்

"எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள்; ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது. வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக்களத்தில் தன்னை பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி; பாரத நாட்டைத் தலைகுனியவைத்த நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சிகொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக்காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த - உன்னத - தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

'எனது மக்களின் விடுதலைக்காக'
என்ற கருத்துத்தொகுப்பிலிருந்து

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன்மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம், என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாக பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக்கண்டேன். அதில் நான் பெருமைகொண்டேன. இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதர் கூறியிருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பான் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும்; எமது மக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்; தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாயகப்பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும்— இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி, நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம்; எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை, இந்தியாவுக்குப் பொறுப்பளித்தோம்.

அதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம், எமது மக்களாகிய உங்களுக்குத்தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரிதகதியில் தமிழ் மண்ணைக் கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலீஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது.

அவசர அவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப்படையின் அனுசரணையுடன் சிங்கள அரசு ஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஒரு முற்றுப் புள்ளி காணத் திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப்பிரச்சனையில் தலையிட்டது. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்தது. பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது ஆயுதபோராட்டத்தை நிறுத்திவைத்தது. ஆகவே, பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத்தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மிக மரபில் பிறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டான்.

மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் — எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடு இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இது தான்"

□□

'கந்தையா வாத்தி' கண்மூடி விட்டாராம்.
சந்தைக்கு வந்தது செய்தி,
எல்லோரும் திடுக்குற்றுப் போனார்கள்,
நல்லாய் இருந்த மனிதன்
நேற்றிரவு
நடுச்சாமம் எழுந்து வெளியே போய் வந்து
படுத்தாராம்
காலையிலே பார்த்தால் கண்மூடிக் கிடந்தாராம்.
உண்மையிலே அச்சாச்சாவு.
புண்ணியவான் போய்விட்டார்.
ஊரெல்லாம் சேதி ஓடிப்பரவியதால்
நாற்சார வீடு நிரம்பி வழிகிறது.
முற்றம், வளவு, பின்கோடி எங்கெங்கும்



# ஒரு மரண புராணம்

□

புதுவை இரத்தினதுரை

ஊர்வந்து கூடி உளது.
வாங்கொன்றில்
கந்தையா வாத்தி கால் நீட்டிக் கிடக்கின்றார்.
'பொன்னம்மா மாமி'
அவர் பெஞ்சாதி
விம்மி அழும் குரலின் வீச்சில்
வீடே அதிர்ந்து வெடிக்கிறது.
சும்மாவா?
நாற்பது வருடங்கள் 'தாங்கிய கொழு கொம்பை'
இன்றிழந்துபோன துயரம்
எப்படித் தாங்கி இருப்பாள்?
துடிக்கின்றாள்.
முற்றத்தைப் பந்தல் மூடிற்று.
இழவு சொல்லி
போகும் காரிரண்டு புறப்பட்டுப் போகிறது.
பெட்டி,
கிரிகைச் சாமான்கள்,
வந்திறங்கிக் குருக்கள் வசமாச்சு.
வெற்றிலைக்கும், சுருட்டுக்கும் வெகு மவுசு
எல்லோரின் வாயும் இரத்தச் சிவப்பாச்சு.
கொள்ளிவைப்பதாரென்ற கேள்வி எழுகிறது.
ஏன்?
கந்தையா வாத்தி மலடனல்லன்;
ஏழு பிள்ளைகளுக்குத் தகப்பன்
நாலு பொடியள்
மூன்று பேர் பொடிச்சிகள்
எங்கே அவர்கள்?
வாத்திவளர்த்த நாய்மட்டும்
கட்டிலின்கீழே
காத்துக் கிடக்கிறது.
கொள்ளிவைப்பதாரென்ற கேள்வி எதற்கு?
பிள்ளைகள் எல்லாம் எங்கே போனார்கள்?
பொன்னம்மா மாமி பெரிதாய்க் கத்துகிறாள்.
மூத்தவன் லண்டனிலாம்.
மற்றவன் ஜேர்மனியாம்
நடுவிலான் நோர்வேயில்.
கடைசிப் பெடியன் கனடாவாம்.
பெட்டைகளில் ஒருத்தி வத்தளையில்

மற்றவள் பிரான்சிலாம்
சரிபோகட்டும்.
கடைக்குட்டி கவிதா எங்கே?
அவளும் சுவிசுக்குப் போய் ஆறுமாதமாம்.
கொள்ளிவைப்பதாரென்ற கேள்வி எழுகிறது.
ஐயோ பாவம்
கந்தையா வாத்தி கட்டிலிலே கிடக்கின்றார்.
பொன்னம்மா மாமி பெரிதாய்க் கத்துகிறாள்.
வாத்தி வளர்த்த நாய்மட்டும்
கட்டிலின் கீழே
காத்துக் கிடக்கிறது.
வேரிழந்த ஆலமரமாகி
நடைப் பிணமாய்
ஊரிருந்தாரென்ற உண்மை சுடுகிறேது.
தாங்குமென்று ஈன்ற விழுதெல்லாம்
தாய் மரத்தை
ஏங்கவிட்டுச்சென்ற ஏக்கம்தான் சாவாச்சு.
என்ன உறவு
ஏனிந்தப் பொய்வாழ்வு?
கண்ணினுக்கு 'அந்திமத்தில்' காவலில்லை
என்றான
பின்பும் இமைகளையேன் இவர்கள்
பெறவேண்டும்?

❐●❐ ❐●❐ ❐●❐

வெளிச்சத்தின் 1994 ஐப்பசிமாத இதழ் கவிதைச் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது. எனவே இந்த இதழுக்கு கவிஞர்களிடமிருந்து கவிதைகளையும் கவிதை பற்றிய கட்டுரைகள், விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம். படைப்புகளை அனுப்பவேண்டிய முகவரி!

வெளிச்சம், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்
நடுவப்பணியகம், கோண்டாவில்.



# வனவாசத்தில்

□
□

**பிரகலாதஹேமந்த்**

அன்று பின்னேரம் நாங்கள் அந்த வீட்டுக்கு வந்திருந்தோம். நீண்டநாட்களாக, இருப்பதற்கு ஒரு வீடுதேடி அலைந்தபிறகு, அந்தவீடு எதிர்பாராமல் கிடைத்தது. கையில் சாவி கிடைப்பதற்கு முன் வீட்டினுள் எப்படிப்புகமுடியும்? சாவியை நாங்கள் பெற்ற பிறகுதான் வீட்டின்வசதி, அமைப்பு, சாதகம், இன்னும் ஏதெல்லாமோ பார்க்கக் கூடியதாக இருந்தது.

நான்தான் முதலில் வீட்டைத்திறந்தேன் என நினைக்கின்றேன். மிகவும் பிடித்தமான வசீகரமாகவும் நமக்கு பொருந்திவந்த மாதிரியும் அந்தவீடு சிநேகபாவத்துடன் இருப்பதாகப்பட்டது. சில ரகஸியங்களை ஆர்வமுடன் பேசமுனைவதாக அதன் மௌனம் சொல்லிற்று. அது தன்னுடைய உணர்ச்சிகளைக் கொட்டத்துடிப்பதாக உணர்ந்தேன். அநாதரவாக இருக்கும்போது, குந்தி இரண்டு நிமிடம் பேச ஒருவன் கிடைத்த ஆசுவாசம் அதுக்கிருக்கலாம். அதன் சௌந்தர்யம் எனக்கும் பிடித்தது.

அந்தவீடு பற்றி மனைவிக்கு ஆச்சர்யமாகவும், சலிப்பாகவும், பயமாகவும், இருப்பதை அவளின் பேச்சும் முகக்குறிப்புகளும் சொல்லின. 'இந்தப் பெரிய வீட்டில் நாங்கள் மட்டும் தானா இருப்பது' எனக் கேட்டாள். 'வேறெப்படி, என நான் கேட்டபோது, திடுக்குற்றுவிட்டாள். அவளது முகத்தில் ஒரு குண்டு வெடித்ததைப்போன்ற உணர்ச்சி சிதைவு. 'புக்காரா வந்தால் நான் தனிய என்ன செய்யிறது? பிள்ளையையும் தூக்கிக்கொண்டு எங்கே ஓடுவது? என்றாள். அவளது கேள்வியின் நியாயத்துக்கு என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை.

'புக்காரா' விமானத்தின் குடலை உருவும்

இரச்சலையும், அது குண்டு வீசுவதையும், குண்டுகள், இருபது அடி ஆழத்துக்கு மேல் நீர்ஊற்றுவரை குழி தோண்டும் என்பதையும் அனுபவமாக உணர்ந்தவள். அதன், குண்டடியில் சிதறிப்போன பிணத்தை தன்கையால் அள்ளிப் போட்ட துர்ப்பாக்கியத்தை அவள் அடிக்கடி சொல்லுவாள். இதெல்லாம் எனக்கு ஞாபகத்தில் வந்தோடின. அவளின் மூளையிலும் இவை அகற்றப்படமுடியாத நினைவுக்குவியலாக இருக்கின்றன. அந்தக்குண்டு வீச்சுக்களின்போது மயிரிழையில் இரண்டுதரம் உயிர்பிழைத்தவள். குண்டு வீச்சு நடந்த அந்த ஈனமான சந்தர்ப்பத்தில் திக்குத்திசை தெரியாமல் குழந்தையை நெஞ்சோடு அணைத்தபடி, கூந்தல் குலைந்து சிதறக் கதறிக்கொண்டு விழுந்தெழும்பி ஓடியதை இன்னும் துக்கத்துடனும் கோபத்துடனும் சொல்லுவாள். அதனால்தான் இப்போது ஒன்பது தடவைகள் — இந்தச் சண்டை தொடங்கிய நான்கு வருடத்துள் இடம் மாறினோம். எந்த வழியுமின்றி ஒவ்வொரு இடமாக ஓடவேண்டியே இருந்தது. ஒவ்வொரு தடவையும் நாங்கள் ஒரு வீட்டுக்காக அலைய வேண்டியுமிருந்தது.

சண்டை தொடங்கி மூன்றாவதுவாரம். எமக்குத் தெரிந்தவரையில் எந்த நியாயமுமின்றி எங்கள் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. மூன்றுநாள் தொடர்ந்த குண்டுவீச்சில் நாங்கள் பதுங்கி, பீதியடைந்து, உயிருக்குப் போராடிய அந்தக்கணங்களில் எங்கள் வீட்டை விமானங்கள் அழித்தன. விமானங்கள், ஒன்றுமாறி ஒன்றாக மிக மூர்க்கமாக குண்டுகளை வீசின. அந்த வீட்டை அழிக்கும்வரை அந்த விமானிகளின் மனதில் எவ்வளவு வன்மமும், வெறியும் இருந்திருக்கும்? அந்த நிகழ்வை என்றைக்கும் மறக்கமுடியாது எந்தச் சமாதானத்தின் வருடலும் அவற்றை ஞாபகங்களிலிருந்து அகற்ற முடியாது. நாங்கள் உயிர் பிழைத்தது தற்செயலானது என்பதுதான் உண்மை.

அப்பாவின் வாழ்நாள் உழைப்பு அந்தவீடுதான். எங்கள் குடும்பத்தின் வாழ்க்கையும் அதுதான் ஒவ்வொரு பொருளையும் சிறுகச்சிறுகச் சேர்த்திருந்தோம் வீட்டையும் வளவையும் அழகாக எப்பவும் கூட்டி, குளிப்பாட்டி, மெருகூட்டி, பொட்டிட்டமாதிரித்தான் அக்கா அதனைக் கவனித்தாள். பண்டிகைகள், நோன்புகள் 'என்று வரும்போதெல்லாம் அதன் பரிமளிப்பு, பராமரிப்பு வேறு. எங்கள் குடும்பத்தின் ஐதிகங்களுடன் அது நெருங்கித் தோழமை கொண்டிருந்தது. அது வெயிலில் வெந்துபோகாமல் நிழல் மரங்கள். அதன் அழகுக்கு பூமரங்கள். மெருகேறும் பூச்சு உள்வீட்டில் ஒவ்வொன்றும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில்.. அது ரசிப்பதற்கென்று இசைக்கிற மாதிரி இரவில் சங்கீதம்.. (அப்பா சங்கீதத்தில் ஈடுபாட்டுடன் ஒன்றிப்போகும் நேரம் அவை) குண்டுவீச்சில் அது அழிந்தபோது புகைமண்டலமும் கற்குவியலும் பொருள்களின் உடைவும்தான் ஞாபகத்திற் பதிந்தன. மற்றெல்லாம் அழிந்துபோயின. எல்லா நம்பிக்கையும் நொருங்கிற்று. அப்பாவால் தாங்கமுடியவில்லை. வேதனையை அவர் நெஞ்சுக்குழிக்குள் அமுக்கப் பிரயத்தனித்தார். அம்மா புலம்பினாள்; திட்டினாள்; அழுதாள். இனி ஊர்விட்டு எங்குபோய்ப் பிழைப்பதென்று புரியாத சூன்யத்தில் தடுமாறினாள், அவள். அக்காவும் தம்பியும் திக்கற்றிருந்தார்கள். என்னுடைய குழந்தை மிரண்டு முழித்தபடியிருந்தான். உயிர் பிழைத்தது லாபம் என்று நான். எதற்காக குண்டு வீசப்பட்டது என்று அம்மா கேட்டுக்கேட்டுத் திட்டிக்கொண்டிருந்தாள். அன்றிலிருந்து எங்களின் குடும்பம் தனித்தனியாகிற்று. அந்தநாளின் பிறகு, இரண்டு வாரத்தில் ஊருக்குள்ளிலிருந்து, எல்லோரும் ஒரு மதியவெய்யிலில் ஓடி

வரவேண்டியதாயிற்று. துயரக்குரலுடனும், மாறாத, தாங்கமுடியாத வேதனையுடனும் எல்லோரும் வெளியேறினர். ஊர்முழுவதையும் இராணுவம் தன்கைப் பிடித்துக் கொண்டுவிட்டது. அந்தநாள் தொடக்கம் நித்திய அலைவே சங்கதியாச்சு.

கிடைத்த இரவல் வீடுகளில் இன்னொரு குடும்பத்துடன் சேர்ந்து—தனியாக—இருப்பதே என்றானது. வேறு வழியிருக்கவில்லை. இரவல் வீடுகளில் எல்லாவற்றிலும் ஒரு பாதியை இழந்ததுபோல ஒரு அவஸ்தை. இந்த ஒன்பது வீடுகளிலும், சிரமங்களினூடாகவும் ஒரு மனச்சரிவு நிகழாமல் அவர்கள் நடந்தாலும் அவற்றிலும் நிரந்தரமாக இருக்கமுடியவில்லை. ஒவ்வொரு இடத்திலும் இராணுவத்தின் வெறித்தனம். ஷெல்லும் குண்டுவீச்சுக்களும் நிம்மதியைத்தின்றன. இப்படியே வெளியேற்றல்களும் ஓட்டங்களுமாகவே ஒன்பது வீடுகளில் வாழ்ந்திருந்தோம்

எல்லாவற்றையும் ஏற்று அனுசரிக்கும் மந்திரத்தை உச்சாடனம் பண்ணிக் கொண்டு நான். எல்லாவற்றிற்கும் சலிப்பும், கோபமும், கேள்விகளுமாக மனைவி. குழந்தையின் எதிர்காலம்பற்றி, அவனைப்பற்றி பேச்செடுக்கவே பயந்தேன். பேச்சு வந்தால் மனைவி பதில் தேடமுடியாத கேள்விகளை அடுக்கிச் சுமையேற்றுவாள் என்ற உயிர்வாதை என்னைத் தின்றது. இரவுகளில் என்னை விழித்தபடி கிடக்கியிருந்தேன். இருள் எனக்கு பீதிதந்தாலும் அது ஒரு வரம்மாதிரி இருந்தது மறுபுறமும் அதுவே உயிரின் மையத்தில் சுண்டிக்கொண்டிருந்தது. உறங்கிப்போனேன் என்று மனைவி நினைத்து எதையும் கேட்காமல் இருப்பதே போதும் என்ற சுகம். நாளையும் எதிர்நாட்களும் குடும்பமும் என்ன என்ற பாலையின் நீட்சிஇரவுகளில் வருத்திற்று.

இப்போது இந்தவீடு. ‘இந்தவீட்டில் நாம்மட்டும் தனியாக இருந்து என் முடங்குவான்? நம்மைப் போல வீடுதேடும் தனது சிநேகிதியை இருத்தலாம்’ என்றாள். நான் எதுவும் பேசவில்லை. என்ன சொல்லமுடியும்? புக்காரா பற்றி நிச்சயமான எதையும் யாரும் சொல்லமுடியாது. வீட்டில் சிநேகிதியை இருத்துவதற்கு எப்படிச் சம்மதம் கொடுப்பது? இந்தவீட்டின் பின்னணியை இன்னும் மனைவியே அறிந்திருக்கவில்லை என்னைக் கேள்விகளே — பதிலற்ற கேள்விகளே — முன்னின்று மிரட்டின. கேள்விகள் பற்றிய பிரமையில் நான் உலவுகின்றேனா என இருட்குகையில் வழியற்று ஓடிக்கொண்டிருந்தேன் நான். எதைப்பற்றி யோசித்தாலும் அது தவறி, ஒவ்வொரு கணமும் விமானங்களின் காட்டுமிராண்டித்தனமான இரைச்சல்கள் என்புலன்களில் நிறைந்துவந்தது. கோபம் கொந்தளித்துப் புரண்டது. என்றாலும் எதுவோ ஒன்றின் ஞாபக மூட்டலில் அடங்கிப்போனேன். ‘இந்த வீட்டில் யாரையும் இருத்துவதாக இருந்தால் வீடுதந்தவர்களைக் கேட்க வேணும்’ என்றேன்.

•

இந்தவீட்டை முன்பின் அறிதல் இன்றிய ஒருவன் தந்திருந்தான். வாடகை, பிரதியுபகாரம் என்றெல்லாம் இல்லை. என்னால் நம்பமுடியாமல் இருந்தது. நான் வீடுகேட்டுச் சென்றபோது ‘வீடு இல்லை. அதை யாருக்கும் குடுப்பதாக உத்தேசமில்லை’ என்றான். சில வேளைகளில் தனக்குப் பிரத்தியேகமாகத் தேவைப்படும்’ என்றும் சொன்னான். அதன் மேல் எதுவும் என்னுடன் பேசத்தயாரில்லாதவன் போல எழுந்து உள்ளே சென்றான். அவனது இளகிய கறுப்பு நிறமுடைய முகத்தில் எதையும் என்னால் உணரமுடியவில்லை. அவன் கோபமாகவா? இல்லை சாதாரணமாகவா? என்னுடன் பேசினான். என்பதையும் என்னால் யூகிக்கமுடியவில்லை. நான் விடைபெற்றுவரு

வதற்காக உள்ளே சென்றவனை எதிர்பார்த்திருந்தேன். மனம் வீடுபற்றிப் பின்னமிட்டது. இனி எங்கு தேடமுடியும்? எங்கும் வீடில்லா மனிதர்களின் அதிகரிப்பு. (வீடுகளை இராணுவத்திடம் பறிகொடுத்தவர்களின் அந்தரிப்பு). உள்ளே சென்றவன் வந்தான். நான் எழுந்தபடி விடைபெற்றேன். 'இருங்கள். ரீ குடித்துவிட்டுப் போங்கள்' என்று கூறிவிட்டு மீண்டும் உட்சென்றான். உள்ளே சென்று யாருடனோ பேசியவன் இரண்டு நிமிடங்களில் மீண்டும் என்னருகில் வந்தமர்ந்தான். நான் தேனீரைப் பருகியபடியிருந்தேன். அவனது முகத்தில் எந்தச் சலனமுமில்லை. என்னைக் கூர்ந்துபார்த்தபடியே இருந்தான். என் மனம் புரண்டு இடறித்துடித்தது? வேறு என்ன வழி? இனிவீடு ‥டுப்பது என்பதைவிட அதைப் பற்றி யோசிக்காது, ஒரு மரத்தடியின் கீழ் குந்துவது மேல் என நினைத்தேன். 'உங்களுக்கு அந்தவீட்டைத் தருகிறேன்.' என்றான் அவன். எனக்கு ஒரு கணம், என் செவிகளில் நம்பிக்கையின்மை தோன்றியது மறுகணம் இறுக்கிய கட்டிலிருந்து விடுபட்டவன் போலவுணர்ந்தேன். அவனை மிகவும் நன்றியுணர்வு பொங்க அவதானித்தேன். 'குளிக்கும் கிணறு பங்கு, மற்றப்படி ஏதும் குறையில்லை.' என்றான். கிணற்றுச் சண்டை நடந்ததுண்டு என்றான், பவ்வியமாக. நிறுத்தி, கடைவாயில் புன்னகை வழிய என் முகம் பார்த்தான். எனது பதில் எப்படி இருக்கும் என அவன் சுவாரஷ்யத்துடன் எதிர்பார்த்தான். எனதுபதிலில், இனி நான் எதிர்நோக்கப்போகும் கிணற்றுப்பிரச்சனைக்கு நான் எவ்விதம் தீர்வுகாண்பேன் என அவன் அறிய முற்பட்டது போலிருந்தது. 'பரவாயில்லை நிலைமையைப்பொறுத்து நடந்து கொள்ளவேண்டியதுதான் பெரும்பாலும் ஒதுங்கிக் கொள்வது; அமைதியாக இருந்துவிடுவதுதான் வழி. என்றேன். என்ன நினைத்தானோ கையில் சாவியைத் தந்தான். நன்றியைத் தந்து விடைபெற்று வந்தேன்.

பலநாட்கள் யாருமின்றியதால் புறாக்களின் சிறகடிப்பும் அவற்றின் குதூகலமான குடும்பம் நடத்தலும் நிகழ்ந்திருந்த சுவடு வீட்டிலிருந்தன. அதன் தனிமையில் புறாக்கள் எச்சமிட்டிருந்தன. ஒன்றிரண்டு வௌவால்களின் பறத்தல். மிகுதியொனில் புறாக்களின் சந்ததிப் பெருக்கமே. அவற்றின் சல்லாபிப்பில் நிகழ்ந்த இறகுதிர்ப்பு, சிந்திக் கிடந்தன. பட்சிவாசத்தில் வீட்டைக் கூட்டி, கூரைத் தூசைத்தட்டி சமுவி முடிய உச்சியில் சூரியன் மிலாந்தியது. தென்னைகள் வெந்துகொண்டிருந்தன. வீடு பரிமளித்தது. மறுபடியும் மனிதர்களைக் கண்ட பூரிப்பு அதற்கு. அது தென்னைஞ்சோலையில் மறுபடியும் பூத்துக் கிடந்தது.

காற்றுவர ஏற்றமாதிரி ஜன்னல்கள். எந்தப் புழுக்கமென்றாலும் எந்தக் குளிரென்றாலும் அலுக்காத சுகம். (சுகம் அலுக்குமா) இரண்டு சமையற்தட்டுகள். வீட்டுடனே கழிப்பறையும். மற்றும்படி அத்தியாவசிய அம்சங்களுடன் வசதி கூடியிருந்தது. எனக்குத் திருப்தி, இளகியகறுப்பு நிறமுடைய அவனில் நன்றியாக பரிணமித்தது. இது இராணுவ எல்லைக்கு சற்று அப்பாலான தூரத்திலிருந்தது அந்தவீடு அங்கு இராணுவம் வருவதாக இருந்தால் பெரியதொரு, தொடர்ச்சியான சண்டைக்குப்பிறகுதான் அங்குவர முடியும். அங்கு இராணுவம் வரமுடியாது என்ற என் தீர்மானம் உறுதியாக இருந்தது. அவ்வளவுக்கு இராணுவத்தைத் தடுக்கும் முஸ்தீபுகள் இருந்தன. ஒரு நிழல்மரத்தின் கீழ் ஆசுவாசத்துடன் நிற்பதுபோன்றும், சுமையிறக்கமும் தெம்புமாகவும் இருந்தது இந்த வீட்டுக்குவந்தது.

எங்களிடம் பெரியளவில் தளபாடங்கள் எதுவும் இருக்கவில்லை. எல்லாவற்றையும் விமானங்கள் தின்று

விட்டதை நினைத்து இப்போது துக்கப்பட்டாள் மனைவி. அந்த விமான ஓட்டிகளையும் அவர்களின் எஜமானர்களையும் நான் சபித்தேன். (இப்படி நான் பலதடவைகள் சபித்துள்ளேன்) என்னைப்போல எத்தனை மனிதர்களின் சபித்தல்களும், திட்டுதல்களும் புறக்கணிப்பும் அந்த விமானிகளையும் அவர்களின் எஜமானர்களையும் நோக்கி வீசப்படுகின்றன. அவர்களின் சிந்தனையும் மனமும் நாகரிகமும் எவ்விதம் இப்படியாயிற்று என, பலமுறையைப் போல இப்பொழுதும் யோசித்தேன்.

சுருக்கமான, மிக அவசரமான, அவசியமான ஏற்பாட்டின்பின் அன்று பின்னேரம் அந்த வீட்டுக்கு குடிவந்திருந்தோம். அந்த நன்றிக்குரியவனின் நினைவுகள் என்னில் மூட்டம் கட்டி நின்றன. துணைவியின் முகத்தில் மகிழ்ச்சி வற்றியிருந்தது. புக்காரா விமானங்கள் குண்டுவீசிய நாளில் இருந்து அவள் தன் இயல்பல் மாறிவந்துகொண்டிருந்ததனை அவதானித்திருந்தேன். இன்று இன்னும் சோர்வு களைகட்டியிருப்பதாகப்பட்டது. இடையில் இரண்டுதரம் வந்து 'யாரையாவது துணைக்கு இருத்தினால் என்ன, வீட்டுக்குரிவரிடம் சொல்லிப்பாருங்கள்' என்றாள். அவள் மனசின் தவிப்பு கெஞ்சுவதாக இருந்தது. விமானங்கள் குண்டுவீச வரும்போது மனசின் வேர்கள் பதை பதைக்கும். துணைக்கு யாராவது இருப்பது கொஞ்சம் ஆறுதல். இதை நான் எப்படி அந்த இளகிய கறுப்பு நிறமுடைய என் நன்றிக்குரியவனிடம் சொல்ல முடியும்? எனக்கு மனசுள் வெட்கம் தலையெடுத்தாடியது. இந்த அனுபவங்களை அவனும் பெற்றுத்தானே இருப்பான்? இதை விடவும் பயங்கரமான நிலமைகளினூடு அவன் தன்னை நிதானமாக்கித்தானே அவ்வாறிருக்கிறான். அவனிடம் எப்படி இந்தச் சுருக்கங்களைச் சொல்லமுடியும்? வீடுதந்ததே பெரும் புண்ணியம் என்றதுபோதாது இப்போது இதுவும் கேட்பதா? துணைக்கு யாராவது என்றால், முதலில் வருவது கிணறும் தண்ணீர்ப்பிரச்சனையும் தான். இன்னொரு புதுப் பிரச்சனையாகத்தான் அது அவனுக்குத் தோன்றும்! நான் மனைவிக்குப் பதில் கூறாதிருந்தேன்.

அன்று மாலை எங்கள் நண்பர் இருவர் அங்கு வந்திருந்தனர். வீடு நன்றாக இருப்பதாகவும், நாங்கள் அதிர்ஸ்டக்காரர்கள் என்றும் சொன்னார்கள். நல்ல வசதியான வீடு என்றும், எங்களுக்கு மிகவும் பொருத்தமானது என்றும், இப்பொழுது இப்படி வீடு எடுப்பது மகா காரியம் என்றும் சொன்னார் ஒருவர். இந்த வார்த்தை அபிப்பிராயங்கள் எனக்குத் தேறுதல் ஊட்டின. இவர்களின் இந்த அபிப்பிராயங்களை தான் பொருட்படுத்தவில்லை என்பதாக இருந்தது மனைவியின் முகமும் அவளின் பார்வையும். நான் அவர்களிடம் இப்படிக் கூறினேன்; 'ஆள்பயப்படுது மச்சான். நானும் எந்த நேரமும் நிற்கிறதில்லை. இவவோடை துணையா இருக்கிறதுக்கு வேற ஆட்களுமில்லை. தென்னந்தோட்டத்தில இருக்கிற வீடு எண்டால் 'புக்காராவும்' 'சுப்பர் சொனிக்கும்' 'சியாமாசெட்டியும்' ஸ்பொட் பண்ணுவான்' என்று. நான் தனக்காக பரிந்துரைத்ததாக அவளது முகத்தின் நரம்புகளில் சிலிர்ப்பின் வேர்விடல். எப்பொழுதும் கலவரமூட்டும் ஹெலிகொப்ரர்களும் குண்டுவீச்சு விமானங்களும் அவளைச் சன்னமாகப் பயமுறுத்திவைத்துள்ளன. உயிரைத்தின்று விடுவோம் என்று சபதம் எடுத்ததைப்போல அவை அவளின் தலையைச் சுற்றுகின்றன. ஆனால் நான் அவள் பற்றிக் கதைத்த அக்கணத்தில் அவள் புனர் ஜென்மம் பெற்றதுபோல மலர்ந்திருந்தாள். பல விடயங்களையும் பேசிய நண்பர்கள் விடைபெற்றுச் சென்றார்கள்.

பகல், நீரால் கழுவிய ஈரலிப்பின் பதனம்.

குளிர்மை, வெறுந்தரையில் படுத்துறங்க வேண்டுமென்ற அவாவின் விரிப்பு. தரையிலேயே உறங்குவதாகக் கூறிச் சரிந்தேன். தென்னைகளில் படிந்துவந்த காற்று ஆசுவாசமாக இருந்தது. யார் என்னை ஊஞ்சலில் ஆட்டுவது? எவர் சாமாரம் வீசுவது? மீண்டும் தாலாட்டுப் பாடும் பூக்குரல்... குதூகலிக்கும் மனசுடன் எங்கோ கைப்பற்றிச் சென்றேன்.

திடீரென என்னை அழைத்து நிறுத்தும் ஒரு குரலின் ஒலி. மிக நிதானமாக அழைக்கும் குரல் கேட்கிறது. கைதவறி வீழ்ந்ததுபோல் மிரண்டு விழித்தேன். 'நன்றாக யோசித்துப் பாருங்கள். நீங்களும் குழந்தையும் இல்லாத வேளைகளில் நானும் குழந்தையும் எப்படித் தனித்திருப்பது. உயிரைக்குடிக்க அந்தச் சனியங்கள் வந்தால் என்னால் தாங்கமுடியாது' என்று மந்திரித்தாள் துணை. ஒரு சாபம்போல அவள் மண்டையில் இந்த ஞாபகங்கள் படையெடுத்து கிளம்புகின்றன. சாபத்துக்குரியவரைச் சாபமிட்டேன். ஒன்றையுமே சிந்திக்க முடியாமல் என்நிலை சிக்குண்டு சிக்குண்டு வருவதாக உணர்ந்தேன். குப்புறவீழ்த்திப் பிடரியில் சப்பாத்துக் கால்களால் மிதிப்பதைப் போலிருந்தது. மனைவியின் விழிகள் கன்றிப்போயின. இரத்தம்வற்றி உயிர்நரம்புகள் தளர்வது போலாகிவிட்டது. நோய்கொண்ட செடியாக நொந்து வெந்துவிட்டாள். அவளிடம் எதைப்பற்றியும் கேட்கமுடியாது; சொல்லமுடியாது. ஏதாவது கேட்டால் அணை உடைந்ததைப்போல குமுறல் வெடிக்கலாம். அதில் கோபமோ, அழுகையோ, வேதனையின் பிழிதலோ, வெறுப்போ, குமுறலோ நம்பிக்கையின்மையோ எதுவோ கட்டற்றுப்பீறிடும். அது என்ன விபரீதத்தை நிகழ்த்திவிடுமோ என்று துயருற்றிருந்தேன். வீடு பற்றிய மிகப்பெரிய பிரச்சனைதீர்ந்து விடுமென்ற பிரமை சிதைவுற்றது. நகரத்தில் நான் புரிந்து வந்த வேலையைவிடலாம் என்ற எல்லையில் வந்திருந்தேன். எல்லாவழியும் அடைபட்டபின் இந்த மார்க்கம்தான் மீதமாயிருந்தது


வார இறுதியில் நான் வீட்டுக்குச்சென்றிருந்தேன். மனைவி பூரித்தபடி நின்றாள். விழித்தபடியே நான் கனவு காண்கிறேனா? என்ற நடுக்கம் என்னுள் அலையெடுத்தது. அவள் சொன்னாள்: தாதி ஒருத்திக்கு வீட்டின் ஒரு பகுதியை, நமக்கு ஆட்சேபனையில்லையென்றால் வழங்கினால் நன்றென அந்த இளங்கறுப்பு நிறமுடைய நன்றிக்குரியவன் வந்து சொல்லிச் சென்றான் என்று.

புதிய வீட்டில் இது நாள்வரையிலும் எந்தப் பிரச்சனையும் இருந்ததில்லை. வீடு கிடைத்தபின் இந்த ஒன்றரைவருடங்களிலும் அவனுக்கு நன்றியையோ எந்த உபகாரத்தையோ செய்யமுடியவில்லை எம்மால். எங்காவது பயணம் செல்லும் வேளைகளில். எப்போதாவது வழியில், அந்த நன்றிக்குரியவனைக் கண்டிருக்கிறேன். ஒருவார்த்தை பேசவாய்த்ததில்லை. அவன் என்றும் எதைப்பற்றியோ தீவிரமாக எண்ணமிட்டபடி செல்வதுபோலிருக்கும். அல்லது மிக அவசரமாக சென்றுகொண்டிருப்பான். மற்றும்படி என்றும், எங்களுக்கு தந்தவீட்டுக்குகூட அவன் வந்ததில்லை. எப்படியும் அவனுடன் பேச வேண்டும். என்மனசிலுள்ள நன்றியின் துடிப்பை அவனிடம் தந்துவிட வேண்டுமென்று தவித்தேன். ஒவ்வொருதடவையும் அது கூடிவந்து விலகிப்போயிற்று. கடிதமூலம் எழுதவும் முடியவில்லை. அன்று எப்படியும் அவனைச் சந்திப்பது என்ற தீர்மானிப்பில் அவனிடம் சென்றேன். செல்வதற்குமுன்னும் செல்லும்வேளையிலும் அவனிடம் எப்படிப் பேசுவது என்றெல்லாம் மறுபடி மறுபடி மனதுள் பிரதி பண்ணிக் கொண்டிருந்தேன். அவனிடம் சென்றபோது, அவனது இடத்திற்கு புதிய ஒருவர் வந்திருப்பதாகவும்

அவன் மூன்று நாட்களின் முன் கிழக்கே நடந்த இராணுவத்துடனான சண்டையொன்றில் காயப்பட்டுள்ளான் என்றும் சொன்னார்கள். என்னை இருக்கும்படி சொன்னவன், நன்றிக்குரியவனின் இடத்திற்குப் புதிதாக வந்தவனிடம் என்னைப் பரிச்சயமாக்கினான்.

விம்மும் மனசுடன் புதியவனைப்பார்த்தேன். புதியவன், அந்த வீட்டிலேயே தொடர்ந்தும் எங்களை இருக்கலாம் என்றான். ஏதாவது உதவி வேண்டுமென்றால் அதைத்தான செய்து தருவேன் என்றும் வாக்களித்தான். நன்றிக்குரியவனிடம் என் விசாரிப்பை தான் சொல்வதாகவும் பிறிதொருவேளை நன்றிக்குரியவனைச் சந்தித்துக்கொள்ள தான் உதவுகிறேன். என்றும் சொல்லிக் கொண்டிருந்தான். விடை பெற்றுவரும்போது என் ஆயுள்முழுவதற்குமான நன்றியில் நான் அந்த இளையவர்களிடம் ஒன்றிப் போயிருந்தேன். □□

உருவகம்



# குருவிச்சை

□

**வளநாடன்**

எங்கள் வீட்டு அடிவளவில் ஒருமரம். அது வேறு மரமல்ல- மசுக்குட்டிப்பழ மரமே. பழத்தின் சுவையோ சொல்லில் சொல்ல முடியாச் சுவை. அந்த மரத்தின் கீழ் நானும் தோழர்களும் விளையாடுவதற்காய் அடிவளவுக்குச் சென்று மசுக்குட்டிப் பழ மரத்தின் கீழ் துப்பரவு செய்தோம். தளபாடங்களை எடுத்தோம். அடுக்கினோம். விளையாடுவதற்கு ஏற்றவாறு ஒழுங்கு செய்தோம் அப்போது குருவி ஒன்றின் ஓசைகேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். பழங்காலத்து மேசை லாம்புச் சிம்மினி போல் பூ ஒன்று என் முகத்தில் விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தேன்.

பக்கத்தில் நின்ற தோழன் சொன்னான். குருவிச்சைப் பூ என்று. அப்போது என் ஞாபகத்துக்கு வந்தது. வகுப்பில் எங்கள் ஆசிரியர் ஒட்டுண்ணித்தாவரத்தைப் பற்றி படிப்பித்தது. குருவிச்சை ஒரு மரத்தின் மேல் படர்ந்தால் அந்த மரம் பட்டு விடும் என்று. எங்களுக்கு பலன் தரும் மரம் பட்டுப்போவதை அனுமதிக்க மனம் மறுத்தது. தோழர்களுக்கு என் கருத்தைச் சொன்னேன்.

எங்களுக்கு பழம் தரும் மரம் அழிந்து போவதை நினைத்து கவலைப்பட்டோம். குருவிச்சையை முறித்தெறிய வேண்டும் போல இருந்தது. அதுதான் சரி என்று நண்பர்கள் கூறினர். ஒவ்வொருவரும் தாவி ஏறினோம். குருவீச்சையை பிடுங்கி எறிந்தோம்

கைகளை அசைத்து ''நன்றி'' தெரிவிப்பதுபோல் மரத்தின் கிளைகள் காற்றுக்கு அசைந்தன. மரத்தின் கிளைகள் நெருக்கிடும் சத்தம் வாழவைத்ததற்கு ''நன்றி'' என்று கூறுவதுபோலத் தோன்றியது. சில நாட்களின்... பின் பூக்கள் மலர்ந்து என்னைப் பார்த்து சிரிப்பதுபோலத் தோன்றியது.

□□

கட்டுரை

# மன்னார் மாவட்டத்தில் நாட்டுக்கூத்து

நா. யோகேந்திரநாதன்

பல்லாண்டு காலமாகவே யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, சிலாபம், மலைநாடு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் நாட்டுக் கூத்துகள் ஆடப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம், சிலாபம், மலைநாடு ஆகிய பகுதிகளில் இவை அருகிவந்த போதும் மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இவை இப்போது ஆடப்பட்டு வருகின்றன.


மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடிக் கூத்துகளும், முல்லைத்தீவு வடமோடி, தென்மோடி சாயலுடைய ஒரு தனித்துவமான ஆட்ட முறையைக் கொண்ட முல்லைத்தீவு மரபு முறையிலான கூத்தும் மன்னாரில் வடபாங்கு தென்பாங்கு என இருவகைக் கூத்துகளும் ஆடப்பட்டு வருகின்றன.

எமது மண்ணில் வழங்கி வரும் கூத்துகள் தமிழ் மக்களின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றாக இருந்த போதிலும் தெய்வ வழிபாட்டின் ஒரு அம்சமுமாகவே கருதப்பட்டு வருகின்றது. பொதுவாகவே கூத்துக்கள் கோயிலில் ஆடப்படுவதும் கோயிலில் ஒரு விழா அல்லது ஒரு நேர்த்திக் கடன் சம்பந்தப்பட்டு இருப்பதையும் அவதானிக்கலாம். மேலும் இக்கூத்துக்கள் இந்து அல்லது கிறிஸ்தவ மதசம்பந்தமான கதைப் பொருளாகக் கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம்.

மன்னார் மாவட்டத்தின் 'கூத்து' என்ற தமிழ்மக்களின் பாரம்பரியக் கலை வடிவம் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பேணப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

பாலம்பிட்டி போன்ற பகுதிகளில் வாழும் இந்துசமய மக்கள் பல்லாண்டு காலமாகக் 'காத்தவராயன்' கூத்தை ஆடி வருகின்றனர். இது இனிமையான நாட்டார் இசைப் பாடல்களால் உருவாக்கப் பட்டதுடன் இதில் ஆட்டம் இருப்பதில்லை. ஆனால் தாளம் தவறாது இசைக்கேற்ப நடக்கும் ஒரு 'துள்ளல்நடை' இதன் தனித்துவமாகும்.

அதேவேளையில் கிறிஸ்தவ மக்களால் அந்தோனியார் நாடகம், சந்தோமையர் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், சந்து



ரூசியர், செபஸ்தியார், சந்தியோகுமையார், ஞான சௌந்தரி போன்ற கூத்துகள் ஆடப் பெற்று வருகின்றன. இதிலும் இம்மக்கள் மத்தியில் வழங்கி வரும் விசேஷமான அம்சம் ஒவ்வொரு ஆலயங்களும், அவ்வாலயப் பங்கில் வாழும் மக்களும் தத்தமக்கென்று ஒவ்வொரு தனியான கூத்துகளை கொண்டிருப்பதாகும். உதாரணமாக முருங்கன் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் சந்தியோகுமையர் நாடகமும் பள்ளிமுனையில் புனித நூசியா கூத்தும் வங்காலையில் மரிகிருதல் கூத்தும் ஆடப்பட்டு வருகின்றன. இது போன்ற ஒவ்வொரு கோயில்களும் தமக்கென ஒரு தனித்துவமான கூத்துகளைப் பேணி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் இருவகையான கூத்து முறைகள் நிலவி வருகின்றன. வடபாங்கு, தென்பாங்கு என இவை அழைக்கப்பட்ட போதிலும் வடபாங்கை யாழ்ப்பாணப்பாங்கு எனவும், தென்பாங்கை மாதோட்டப் பாங்கு எனவும் கருதப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணப்பாங்கு வடபாங்கு என மன்னாரில் அழைக்கப்பட்ட போதிலும், இது யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதிகளில் நிலவி வரும் தென்மோடிக்கூத்து வகையை ஒத்திருப்பதை அவதானிக்கலாம். எனினும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து வந்த புலவர்களே வடபாங்கு கூத்துகளைப் பாடினார்கள் என மன்னார் மாவட்டத்தில் நம்பப்படுகின்றது. எனினும் ஞானசௌந்தரி, என்றிக் போன்ற நாடகங்கள் வடபாங்கு ஆட்ட முறையிலேயே இன்னமும் மன்னார் மக்களால் பேணிப்பாது காக்கப்பட்டு வருகின்றன.

இங்கு நாடகங்களும், நாடகச்சுருக்கங்களும் இடம் பெறுவதுண்டு. நாடகம் சில இடங்களில் இரு இரவுகளும். சில இடங்களில் மூன்று இரவுகளும் நடைபெறும். ஆனால் வாசகப்பா ஒரு இரவு மட்டுமே நடைபெறும். வாசகப்பா என்பது ஒரு நீண்ட கூத்தை ஒரு இரவுக்கேற்ற விதத்தில் சுருக்கி நடிப்பதாகும். உதாரணமாக சந்தோமையார், பூவிராசாக்கள் நாடகம் என்பன நாடகங்களாகவும் அதே வேளையில் வாசகப்பாவாகவும் நடிக்கப்படுவதுண்டு. வாசகப்பா என்பதன் அர்த்தம் வசனம் கலந்த பாடல் என்பதே.

## வடபாங்கு (யாழ்ப்பாணப்பாங்கு)

வடபாங்கு என்றிக்கோர், ஞானசௌந்தரி உட்பட பல நாடகங்கள் ஆடப்பட்டு வருகின்றன. இவை சில இடங்களில் தென்பாங்கில் ஆடப்படுவதும் உண்டு.

வடபாங்கு எப்பொழுதுமே இலகுவான மெட்டுக்களையும், சுமுகமான இசையையும் கொண்ட நாடகங்களாகவே அமைந்திருக்கும்.

இக் கூத்துகளில் வீரம், சோகம், காதல் ஆகிய உணர்ச்சிகள் விரவியிருந்தாலும் கோபம், வீரம் ஆகிய உணர்வுகள் மிகக் குறைவாகவே அமைந்திருக்கும். இவற்றின் கதையமைப்புகளும் அவ்வாறான உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத வகையிலேயே அமைந்திருக்கும். தழுக்கு என்ற ஆடல் பாடல் முறை வடபாங்குக்கென அமைந்த தனித்துவமான முறையாகும்.

இதில் வரும் சோகம் தாழிசையிலும் காதல் இன்னிசையிலும், வீரம் கலிப்பாவிலும் அமைந்திருக்கும்.

இக் கூத்தின் கடவுள் வணக்கம் விருத்தப்பாவில் அமைந்திருக்கும். அடுத்து சபைத்தரு (ஆடற்தரு) இதில் உண்டு. மேலும் தெய்வ வணக்கத்தையும், கதைச் சுருக்கத்தையும் கூறும் தோடையம் என்ற பாவகை வடபாங்கில் மட்டுமே உண்டு. இதில் தரு. சிறிது. வண்ணம் என்பவற்றால் கூறப்படும்.

இதில் வரவு, ஆடற்தரு என்பன பின்னணியிலேயே அமைந்திருக்கும். பெரும்பாலும் தருச்சொல்வது அண்ணாவியாரே

செய்வார். ஆடற் தருவின் போது மத்தளம் என்ற தோற்கருவி பிரதான பாத்திரம் வகிப்பதுடன் ஆட்டத்திற்கு சுவையூட்டும் பணியையும் செய்யும். அடுத்து இடம் பெறும் சபை வணக்கத்தை பாத்திரமே தனது சொந்தக் குரலில் பாடி நடிக்கும். மேலும் பாத்திரம் பாடும் போது ஆட்டம் இடம் பெறுவதில்லை. பாத்திரத்தின் உணர்வுக் கேற்ற நடையையோ அல்லது நடிப்பையோ பாத்திரம் கைக்கொள்ளும். ஆட்டங்கள், தருக்களுக்கு மட்டுமே இடம் பெறும். வரவுக் கும் தருவுக்கும் இடையில் இடம் பெறு வதை கொச்சகம் என்று அழைப்பார்கள். இது விருத்தப்பாவடிவில் அமைந்திருக்கும். வடபாங்கில் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் வரவுப்பாட்டும், அதற்கான ஆடற்தருவும் உண்டு. ஆனால் வரவும் தருவு ஒரு பாத் திரத்திற்கு ஒரு முறைதான் உண்டு. மீண் டும் பாத்திரம் வரவேண்டி ஏற்படும் போது வரவோ தருவோ இன்றியே வரும்.

## தென் பாங்கு (மாதோட்டப்பாங்கு)

தென்பாங்கில் சந்தோமையர் வாசகம், அந்தோனியார் வாசகம், செபத்தியார் கூத்து உட்படப் பல கூத்துக்கள் இம்மாவட்டத்தில் ஆடப் பட்டு வருகின்றன. புனித சந்தோமையர் நாடகம் மன்னார் மாவட்டத்தில் ஒரு பொது நாடகமாகக் கருதப்பட்டுப் பல பகுதி களிலும் ஆடப்பட்டு வருகின்றது. ஏனைய கூத்துக்கள்,ஒவ்வொரு ஆலயத்திற்கும் தனித் துவமான ஒவ்வொரு கூத்துக்களாக உண்டு.

இவ்வகைக் கூத்துக்களில் பாடல்கள் பெரும்பாலும் வல்லோசை கொண்டவை யாக இருக்கும். இதில் கடவுள் வாழ்த்து எப்போதும் வெண்பாவிலேயே அமைந்திருக் கும். இதில் சபைத்தரு எனப்படும் ஆட்டம் இடம் பெறுவதில்லை. ஆனால் இதன் பாடல்கள் கவி, இன்னிசை பாவகைகள் ஆகிய முறைகளில் அமைந்திருக்கும்.

இதில் வரும் இன்னுமொரு விசேஷமான அம்சம் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு முறை மேடைக்கு வரும் போதும் தனித்தனி சிந்துக்களும் தருக்களும் ஆட்ட முறைகளும் உண்டு.

இதில் மேலுமொரு தனித்துவமான முறை எந்த ஒரு தென்பாங்குக் கூத்திலும் கட்டியக்காரன், மந்திரன், முரசறைவோன், கப்பித்தான் என்ற பாத்திரங்கள் இருக்கும். இவர்களுக்கென தனித்தனியான தருக்களும், ஆட்ட முறைகளும் உண்டு ஒருவரது பாணி யிலான ஆட்டம் மற்றவருக்கு இருக்காது. ஆட்டங்களிலோ அல்லது தருக்களிலோ ஆண் கள் பெண்களுக்கென வித்தியாசமான ஆட்ட முறைகள் கிடையாது. சில சமயங்களில் பெண்கள் கூட கடுமையான ஆட்டங்கள் ஆடவேண்டி ஏற்படும். (முன்பெல்லாம் ஆண் களே பெண்களின் பாத்திரங்களையும் நடித்தமையால் இம் முறை ஏற்பட்டிருக் கலாம்)

'ஏற்பதோர் நாடகம்' கீர்த்தாம்பிள் ளைப் புலவராலும் 'சந்தோமையார்' நாடகம் மரியாறுப் புலவராலும் பாடப்பட்டதாகத் தெரிய வருகின்றது. சந்தியாகுமையர் நாட கம் 1933ல் ஒரு இரவு நாடகமாகப் பாடப் பட்டு நடிக்கப்பட்டதாகவும் பின்பு இது 1940ல் இரண்டு இரவு நாடகமாகப் பாடப் பட்டதாகவும் தெரிய வருகின்றது. மரியான சந்தாம் புலவர் என்பவரால் பாடப்பட்ட இக் கூத்து முருங்கன் கோயில் பங்கைச் சேர்ந்த குழந்தை மாஸ்ரர்குழுவினரால் பரம்பரை பரம்பரையாக ஆடப்பட்டு வரு கின்றது. இந் நாடகம் ஓரிரவு நாடகமாயி ருந்து விரிவிக்கப்பட்டமைக்கு நாடகம் துன் பியலில் முடியாமல் இருப்பதற்காகவே என இப்பகுதி மக்களால் நம்பப் படுகின்றது. ஒரு கூத்தில் மரணம், கொலை போன்றவை இடம் பெற்று, அவையே நாடகத்தின் இறுதி முடிவாக இருக்குமானால் அது ஊருக்குத் தீமை பயக்கும் என இப்பகுதி மக்கள் நம்பி வருகின்றனர். குறிப்பாகக் கூத்துக்களில் அறம் பாடுதல் பெரும் கேடுகளை ஏற்படுத் தும் என நம்பப்படுகின்றது.

## புதிய கருப் பொருளில் கூத்துக்கள்

அண்மைக் காலங்களில் கூத்துக்களில் வரும் மெட்டுக்கள், ஆட்டங்கள், கூத்து முறைகளைப் பாவித்து நவீன கருப்பொருட் களைக் கொண்டு கூத்துக்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன.

காத்தான் கூத்து மெட்டில் அமைந்த வெற்றிக்களத்தில் வீரவேங்கை என்ற கூத்து பாலம்பிட்டி கலைஞர்களால் மேடையேற் றப்பட்டுப் பலரின் பாராட்டுதலையும் பெற் றது. இதே போன்று குழந்தை மாஸ்ரர் குழுவினரால் வடபாங்கு முறையில் அமைந்த 'கல்சுமந்த காவலன்' என்ற கூத்து மீண்டும் மீண்டும் மேடையேறிப் புகழ் பெற்று வரு கிறது. இதே போல் செபமாலைப் புலவர் அவர்களால் விடுதலைப் போராட்டத்தை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட வட பாங்கு முறையில் அமைந்த கூத்தும், புல வர் கோமேதகத்தால் தயாரிக்கப்பட்ட தெருக்கூத்தும் குறிப்பிடத்தக்கவை.

மன்னார் கூத்துகளில், மட்டக்களப்புக் கூத்துகள் போன்று பெருமளவில் ஆட்டங் கள் இடம் பெறுவதில்லை. இங்கு குறிப் பிட்ட சில கட்டங்களில் ஆட்டம் வருவதும் ஏனைய கட்டங்களில் நடிப்பாலும், நடை களாலும் நிரப்பப்பட்டு வருகின்றன. இன் னும் இங்கு வட்டக்களரி முறை முற்றாக அற்றுப் போனமையும் அவதானிக்கக் கூடிய தாயுள்ளது.

இங்கு பெரும்பாலும் கூத்துகள் கிறிஸ் தவமத அடிப்படையிலேயே இடம் பெற்று வருகின்றன. கிறிஸ்தவ மதத்தின் வருகை யினூடு இங்கு நவீன வசதிகளும், ஆங்கில நாடக முறைகளும் இங்கு வந்தமை வட்டக் களரி முறை அழிந்து போனமைக்குக் கார ணமாயிருக்கலாம். எமது பாரம்பரிய கூத்து வடிவமாயிருந்த போதிலும், சீன், செட்டிங், படச்சட்டமேடை என பல நவீன வசதி களுடன் இணைந்தே மேடையேற்றப் படு கின்றன. மேலும் பிரமாண்டமான காட்சி யமைப்புகளை ஏற்படுத்துதல் போன்ற முறைகளும் பல இடங்களில் கையாளப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் கூத்துக்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படும் போது நடிகர்கள் பங்காளராகவும், ஏனையோர் பார்வையாளராயும் இருக்கும் நிலை இல்லை, ஒத்திகை ஆரம்பித்த காலத்திலிருந்து கூத்து முடியும் வரை முழு ஊருமே பங்காளிகளா யிருப்பார். நாடகம் நடிக்கும் போதே மேடையிலேறி மாலை போடுதல், மோதி ரம், சங்கிலி போன்ற நகைகள் அணிவித் தல் போன்றவை வழமையான சம்பிர தாயங்களாக நிலவி வருகின்றன.

நின்று நிலைத்து வரும் மன்னார் மாவட்டத்தின் பாரம்பரிய கலையான இக் கூத்து வகைகள், காலத்தின் தேவைக்கேற்ப செழுமைப் படுத்தப்படுதலும் நவீன கருப் பொருட்களைக் கொண்டு புதிய படைப்பு கள் உருவாக்கப்படுதலும் அவசியமாகும். மேலும் பரம்பரையாக வாய்மொழியாக வழங்கப்பட்டு வரும் இக்கூத்துகள் நூலுருப் பெற்றுபரவற் படுத்தப்பட வேண்டும்.

•

*(இக்கட்டுரை ஈழநாதம் — வன்னிப்பதிப்பு — முதலாண்டு நிறைவு மலரில் இருந்து இங்கு தரப்படுகிறது)*

□□

# வாருங்கோ ஓடுவம்

தா. இராமலிங்கம்

ஓடு மோனை ஓடு
எங்கே என்றாலும்
ஒதுக்குப்புறம் நாடி
ஓடு!

வந்து விடப் போறாங்கள்
எமை எல்லாம்
வீட்டோடு
சுட்டெரிக்கப் போறாங்கள்!

குண்டு வெடிதான்!
அது குண்டு வெடிதான்!
பொடியங்கள்
இராணுவம் மீது மேற்கொண்ட
கண்ணிவெடித் தாக்குதலில்
நிலம் அதிர்ந்து
யன்னல்
மூடித்திறந்து
வீடு நடுங்கியது.

கிழடு கட்டை என்றுகூட
ஈவு இரக்கம் காட்டாங்கள்
வாருங்கோ
நாங்களும் ஓடுவம்.

தாலிக்கொடி எடுத்து
எங்கையோ வைத்துவிட்டு
சீலை துணி எல்லாம்
கிண்டிக்கிளறுகிறன்
நேரம் போகுது
ஒருக்கால்
நீங்களும்
பாருங்கோ!

இங்கே இருக்குது
இங்கே இருக்குது
கழுத்தில் போட்டுக்கொண்டு
தேடிக்கொண்டிருக்கிறேன்

துப்பாககிச்சூடு
தொடர்ச்சியாய் கேட்குது
வரவரச் சத்தம்
வளர்ந்து கொண்டிருக்குது

எந்தப்பாதையால் ஓடுவதாலே
தப்பிப் பிழைக்க
வாய்ப்புண்டு என்று
யோசித்துக் கொண்டிருக்க
நேரம் இதுவல்ல
வாருங்கோ
கால்போற போக்கில்
ஓடுவம்


ஏதோ இரையுது!
கெதியாய் வாருங்கோ
அந்தக் கோயிலுக்குள்
ஓடி ஒதுங்குவம்

பதுங்கி மறைந்திருங்கோ
பதுங்கி மறைந்திருங்கோ
சுட்டுவிடப் போறாங்கள்
வடலி ஓலையை முட்டிக்கொண்டு
ஹெலிகொப்ரர் ஒன்று
வட்டமிட்டு வருகுது!

பாருங்கோ
புகைமண்டலம் கிளம்பி
எங்கும்
படலமாய் படருகுது
வீடு வாசல் எல்லாம்
எரித்துத் தள்ளுறாங்கள்

பாவம் பசுமாடு!
முறுக்குக் குலையாத
பருத்த கயிறு
உன்னி இழுத்திழுத்துச்
சுற்றிச் சுழன்றடித்து
சுத்திக் கதறி அது
புலுண்டி மறைந்திருக்கும்

கறுத்தைக் கொழும்பானில்
முற்றிக் கறுத்து
முகம் நிறத்த காய்கள் எல்லாம்
வெப்பத்தில் வாடி
வெதும்பி விழுந்திருக்கும்.




# உன்னோடுகலந்துவிட

ச. விக்ரமன்

காற்றே...!
கனமற்ற பொருளுக்கு;
உன்னை...
உவமானமாக்கினார்கள்.
ஆனால்......
கடும் புயலான போதுனது;
கனம் தெரிந்தது.
இனிய தென்றலான போதுனது;
இதம் புரிந்தது.
அதனால்......
உன்னோடு கலந்துவிட ..
உள்ளம் துடிக்கிறது.

பூரண விடுதலைபெற்ற
பௌதீக ஊடகமே...!
நீயில்லாமல்;
தீயேது?...
தீயை வளர்க்கவும்,
அணைக்கவும்
தெரிந்த உனக்கு;
நீரிற்குள் நிற்கப்
பிடிப்பதில்லையே...?
ஏன் ?
அதனால்...
உன்னோடு கலந்துவிட ..
உள்ளம் துடிக்கிறது.

உன்னை...
அடைத்துவைக்க
முயன்றவர்களை
நீ......
தீயோடு சேர்ந்து;
தீர்த்துக்கட்டிய;
சம்பவங்கள்தான்
எத்தனை .? எத்தனை?
அதனால்......
உன்னோடு கலந்துவிட......
உள்ளம் துடிக்கிறது.

எங்கள்
வீரர்கள், தியாகிகள்
விட்ட இறுதி மூச்சுக்கள்
உன்னோடு கலந்துவிட....
நீபெற்ற
பேறுதான் என்னே?
அதனால்...
உன்னோடு கலந்துவிட......
உள்ளம் துடிக்கிறது.

இவையெல்லாம்......;
புயலாய்......,
தென்றலாய்......,
விடுதலைத் தீவளர்த்து......,
தீமையை தீர்த்துக்கட்டி ...,
தியாகிகளின்......;
மூச்சாய் விளங்கும்
எம் தலைவனின்
சாயலன்றோ......?
அதனால்......
உன்னோடு கலந்துவிட......
உள்ளம் துடிக்கிறது.

காலையில இருந்து வீட்டில கிடக்கிற பேப்பரெல்லாம் மேஞ்சு கொண்டிருந்தா எப்படி? அதை செய்யவேண்டிய நேரத்தில செய்யவேண்டாமோ?''

வீட்டிலுள்ளிருந்து கற்பகம் கத்துவது சுந்தரம்பிள்ளையின் காதுகளில் நாரசுரமாக விழுந்தது.

''கற்பகம் ஏனிப்படிக் கத்துறாய்? நான் இப்ப என்னத்தைச் செய்யணும்? உன்னோட சேர்ந்து சமைக்க வேணுமே? எனக்கு சமையலொன்றும் தெரியாது''

பதிலுக்கு கத்தவேண்டும் போல் தான் சுந்தரம்பிள்ளைக்கு விருப்பம். ஆனால் மனைவியென்றாலும் எதிர்த்துப் பேசிப்பழகாதவர். மௌனமாக சமையல் கட்டுப்பக்கம் சென்று,

''என்ன கற்பகம்! என்ன! என்னத்தைச் செய்யச்சொல்லுறாய்!? இந்த அறுபத்திரெண்டு வயசுல பேப்பர்களை படிச்சுக் கொண்டிருக்காட்டி வேறு என்னத்தைச் செய்யிறது?!''

என மென்மையாகக் கேட்டார்.

''என்னத்தைச் செய்யுறதோ! எங்கட கடைக்குட்டிக்கு கல்யாணப் பேச்சு முற்றாகிப் போட்டுது தேரியும் தானே ஏன் மறந்து போச்சே!?



ஓ... நல்லாத் தெரியும். ஞாபகம் இருக்கு .. அதுக்கு என்ன என்னத்தைச் செய்யச் சொல்லுறாய்!?''

''உங்களுக்கு தலையிலதான் முடி கொட்டுதெண்டு பார்த்தா சிந்திக்கிற மூளையும் கொட்டிற்றே? சின்னவன்ர கல்யாணத்துக்குரிய வேலைகளை செய்ய வேண்டாமேப்பா?''

''கல்யாணத்துக்கு நாங்கள் என்னத்தை செய்யவேணும். கோயில் மண்டபம், கல்யாணச் செலவு, ரிசீஸ்டேசன் எண்டு எல்லா வேலைகளையும் பொம்பள வீட்டாக்கள் செய்யுறம் எண்டு சொல்லிப் போட்டுதுகளே!?''

# விண்ணிலிருந்தாலும் தாரகை தாமரையாகாது

□

□

ச வதனா

ஓம் ஓம்... செய்யுங்கள் அதோட ரெண்டு பேரையும் கனடா அனுப்புறதும் அவையளின்ர வேலை தான். ஆனால், எங்கட வேலையெண்டு ஒண்டு இருக்கல்லே!'

''அதானப்பா என்னண்டு சொல்லுமேன்!''

''மூத்தவன் பிரான்சில இருந்தும் அடுத்ததுகள் ரெண்டும் ஜெர்மனியில இருந்தும் என் தம்பி சுவிஸில இருந்தும் அடிக்கடி கடிதத்தில என்ன எழுதுதுகள்? மறந்து போச்சோ! சின்னவன் பாலனிற்கு நல்லா கல்யாணத்த செய்து போட்டு வெளியில அனுப்புங்கோ; அங்கயிருந்தா வீணா பிரச்சினையில மாட்டுப்படுவான். எண்டு எத்தனை தடவை எழுதிப்போட்டதுகள்''.

''சரி சரி அதற்குத்தான் பொம்பிளையின்ர தமையன் இருக்கிற கனடாவிற்கு எங்க பெடியனையும் அனுப்பப்போறோமே! ஏன் இப்ப'' பாலன் ஏலாது எண்டு போட்டானே!?

'இல்லையில்ல அவனொண்டும் அப்படிச் சொல்லயில்லை. அவன் சொல்றான் தன்ர பிரன்ஸ்செல்லாம் கல்யாணத்தை நல்லாப் பெரிசா செய்யச் சொன்னதுகளாம். பத்திரிகையெல்லாம் நல்லா அடிக்கவேணும் எண்டும் கதைச்சவன்.'

ஓ..... அதுக்கென்ன அவன் விருப்பப்படி பத்திரிகையும் அடிச்சு பேப்பருக்கும் கொடுத்து விடுவோமே!'

'அதத்தான் நானும் சொல்ல வந்தனான். இங்க யாழ்ப்பாணத்தில நல்லகாட் கிடைக்கிறது சரியான கஷ்டமாம். அதோட பேப்பருக்கு கொடுத்தாலும் கோடடிச்ச பேப்பரிலதான் வருமாம். அதனால, கொழும்புலபோய் பத்திரிகை அடிச்சு, அங்கேயே கொழும்புப் பேப்பருக்கும் கொடுத்துப் போட்டு வாங்கோ!'

'என்ன?!! கொழும்புக்கோ!? கொழும்பெண்டால் எவ்வளவு செலவு தெரியுமே. எவ்வளவு கஷ்டம் போய்வர!'

'ஓ......அதற்கு என்ன செய்யிறது. பெடியனை கொழும்பிற்கு அனுப்ப ஏலாது. நீங்கள்தான் போகவேணும் போவதற்கு ஏற்பாடு செய்யுங்கோ!'

மனைவி கற்பகத்தின் விளக்கத்தையும் பின் இடப்பட்ட கட்டளையையும் கேட்டு சுந்தரம்பிள்ளை அடங்கிப் போனார்.

'சரி நான் அடுத்த போட்டிற்கு வெளிக்கிடுறன்'

'இங்க யாழ்ப்பாணத்துப் பேப்பரில்ல கோடடிச்சுத்தான் செய்திவரும் அது கூடாது. நீங்கள் கொழும்பிற்கு போட்டுவாங்கோ!'

தாயும், தனயனும் மீண்டும் மீண்டும் தன்னை நச்சரித்தது காதில் ஒலித்துக்கொண்டிருப்பதாக கிளாலி படகுத்துறை மணலில் இருந்த சுந்தரம்பிள்ளைக்கு உணர்ந்தது. அந்தக் கரையில் பெருந்திரளான மக்கள் ஏதோ காரணங்களுக்காக இக்கடலைக்கடக்க இருதினங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்று தினங்களுக்குப் பின் இன்று மறுபடியும் படகுச்சேவை நடைபெறுமென கடற்புலிகள் அறிவித்தபின் இன்றுதான் சனங்களுக்கு மனதிலேயொரு நிம்மதி. முகத்திலோ மகிழ்வு.

இருந்தாலும் அக்கரைக்குச் சென்றால் தான் நிச்சயம்.

கிளாலிக் கடலைக் கடப்பதென்பது பகலில் முடியாத காரியம். காரணம் பகலில் கடக்க முனைந்தால் பூநகரியின் கடற்படையினர் வந்து சூறையாடிவிடுவார்கள். இரவில்தான் கடலைக்கடக்க வேண்டும். அவ்வேளைகளிலும் கடற்படைவருவதுண்டு. ஆனால் அதை கடற்புலிகள் சமாளித்து அடித்து விரட்டி விடும் என்றுதான் சுந்தரம்பிள்ளை கேள்விப்பட்டிருக்கிறார். அது உண்மையா பொய்யா வென இன்று அறியவும் போகிறார்

காலையிலிருந்து காத்திருந்து மதியம்பட்டும் ஆறு இடியப்பமும் ஒரு பிளேன்டியும் குடித்தார். அதற்கே பன்னிரெண்டு ரூபா கணக்கு வந்து விட்டது. இதுவரை அவர் கிளாலிக் கரையை அடையமட்டும் முன்னூற்றி ஐம்பதிற்குமேல் செலவழித்து விட்டார். அவர் இந்தக்கடலைக் கடப்பதைக் கூட பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் இன்னும் எவ்வளவு செலவழிக்க வேண்டி வருமோ. அதை இங்கேயே செலவழித்து 'காட்' அடிச்சிருக்கலாம். கோடடிச்ச பேப்பரில படம்வந்தாலென்ன? முகம் தெரியாதே! இதுகளுக்கு விளங்க வைக்க ஏலாது.

இன்று தமிழீழத்தில் எத்தனையோ பேர் இப்படித்தான். விண்ணிலிருந்தாலும் குளிர்ச்சியாக அழகாகவிருந்தாலும் தாரகை; சேற்றின் நடுவேயிருக்கும் செந்தாமரை போல் வருமா?!"

என்று சுந்தரப்பிள்ளையின் மனவலை இறைஞ்சிக் கொண்டிருந்தது அக்கடலலையைப்போல!

□ □ □

பலரும் கூறியது போலல்ல-கடலில் புறப்படும் போது தனக்குத் தெரிந்த அனைத்துக் கடவுள்களையும் வேண்டிக் கொண்டுதான் புறப்பட்டிருந்தார் சுந்தரம்பிள்ளை. ஆனால் பூநகரியிலிருந்து இடையிடையே 'வெளிச்சம்' மட்டுந்தான் அடித்துக் கொண்டிருந்தவன் நல்லகாலம் கடலில் வந்து கலாட்டா செய்யவில்லை. இருந்தாலும் கடற்புலிகளின் படகுகள் மட்டும் குருவிபறப்பது போல அதிவேகத்துடன் கடற்படை வருவான் என எதிர்பார்க்கப்படும் பக்கம் அடிக்கடி சென்று வந்து கொண்டிருந்தது.

கடல் நன்றாக அடித்ததினால் நன்றாக கடல்நீரில் நனைந்தபடியே கரையை வந்தடைந்தார். கரையில் மிசின் நின்றது. அதில் ஆலங்கேணி வந்து காலை தாண்டிக்குளம் தடை முகாமினை வந்தடைந்தார் சுந்தரம் பிள்ளை.

பொறுத்த வெயிலில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நிற்கவைத்து விட்டனர் சிறிலங்கா இராணுவத்தினர். நேற்றிலிருந்து சரியாகச் சாப்பிடாததினால் சுந்தரம் பிள்ளையின் தலை சுற்றுமாப்போலவும் இருந்தது.

இராணுவத்தின் அர்த்தமற்ற சோதனைகளையும், தேவையற்ற கேள்விகளையும் முடித்துக் கொண்டு ஒரு வழியாக வவுனியாவுக்குள் நுழைந்த சுந்தரம்பிள்ளை தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தையும், தெரியாத சிங்களத்தையும் வைத்து எப்படியோ கதைத்து கொழும்பு சென்றார். அங்கு மகனும், மனைவியும் விரும்பியவாறு ''நல்ல கார்ட்டில்'' ''மலிவு விலையில்'' கல்யாணப்பத்திரிகையை அடித்துக் கொண்டு கோடில்லா கம்பியூட்டர் அச்சில் பதிவாகும் பேப்பருக்கும் கொடுத்து விட்டு ஊர் திரும்பினார்.

பலரும் கூறியிருந்தனர், ரெயிலிலே சிங்களக் காடையர்கள் கொள்ளையடித்துப்போடுவாங்கள் என்று அதனால் சற்றும் கண்ணயராமல் விழித்தபடியிருந்தார் சுந்தரம்பிள்ளை.

தன்னிடம் பறிகொடுக்க என்னயிருக்கிறது என சிந்தித்தார் சுந்தரம்பிள்ளை. ''கொண்டுவந்த ஐம்பதாயிரத்தில இதுவரை போக்குவரத்துச் செலவு ம் ம் ம் மூவாயிரத்திட்ட வந்திட்டுது இனிப் போய்ச்சேர எப்படியும் ரெண்டாயிரம் ரெடியாக இருக்க வேணும். மற்றப்படி ஆயிரம் பத்திரிகை ரெண்டாயிரம் சொன்னவன்... கூறை துணி இருபது கொடுத்தநான். அப்ப இருபத்திஐந்து சரி. பேப்பருக்கு கல்யாணப் பத்திரிகை .. பிறகு நன்றிநவிலல் அதையும் எப்படியோ வேறு கல்யாணப் போட்டோவை வந்தவையளின்ர முகத்திற்கு இதுகளின்ர முகத்தை வைச்சு இப்பவே கொடுத்தது நல்லதாப் போச்சு. அதற்கு .. அந்திந்த செலவெல்லாம் எட்டுக்கு வந்திட்டுது மூன்று தரம் பெரியவனோடையும். மற்றதுகளோட ஜெர்மன், சுவிஸ் எண்டு டெலிபோன் கதைச்சது. எல்லாம் பத்துக்குமேல தான் வரும் அவ சொன்ன இந்தச் சில்லறைச் சாமான்களுக்கே அஞ்சு முடிஞ்சுட்டுது ஐம்பதோட வந்தனான். போகேக்க ஆயிரம் கொண்டு போவனோ தெரியேல்ல .. ம் .. ம் .. கடவுளே யாழ்ப்பாணத்துப் பேப்பரில கோடாம்... இப்ப சிக்கனமா ஐம்பதில முடிஞ்சிட்டுது.

இரண்டு ரவுலிங்பேக், கல்யாணப் பத்திரிகை அடங்கிய பெட்டி என்று மூன்று பார்சலைத் தூக்கிவர சுந்தரம்பிள்ளை பெரிதாகச் சிரமப் பட்டார். ஒருவழியாக தாண்டிக்குளம் சோதனைச் சாவடியை அடைந்து சோதனையில் கலந்து கொண்டார்.

''இது புலிக்கு கொண்டு போறது?''

கல்யாணப் பத்திரிகையைப் பார்த்து சிங்கள இராணுவம் கேட்க,

''இல்லை... ஐயா என்ர புத்தாட வெடிங்கிற்கு...''

''உன்ர புத்தா... புலி... அதுக்குத் தானே கல்யாணம் நீ...... அங்கிட்டு நில்லு ..''

மீசைகூட அரும்பாத அச்சிறு இராணுவத்தினன் சற்றும் மரியாதையின்றி அவரை அப்புறப்படுத்திப் போட்டு ஏனைய பயணிகளில் சோதனையைத் தொடர்ந்தான். அதிலும் ஐந்தாறுபேர் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் எல்லோரையும் வேறு இருவர் வந்து விசாரித்து சுந்தரம்பிள்ளையை விட்டபோது நேரம் மூன்றைத் தாண்டி விட்டிருந்தது.

வேகமாக வெளியேறிய சுந்தரத்தார்... ஆள் பிடித்து சாமான் தூக்கி தமிழீழத்தினுள் நுழைந்தார் அவரின் நல்லகாலமோ என்னவோ அன்று படகுச்சேவை இருந்ததினால் அவர் சாப்பாட்டைப் பற்றிக்கூட சிந்தியாது பயணத்தைத் தொடர்ந்தார்.

□ □ □

மீண்டும் சுந்தரம்பிள்ளைக்கு ஒரு கடற் பிரயாணம் செய்ய வேண்டியதை யெண்ணி கலங்கிய கண்களுடன் கடலைப் பார்த்தார். அந்தி சாயும் நேரம். எங்கும் இருள் மென்மையாகப் படர்ந்து கொண்டு வந்தது. ஆலங்கேணி கரையில் கடற் பயணம் செய்ய படகுகள் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்தன.

''கடவுளே... முருகா அண்டைக்குப் போல இண்டைக்கும் நான் ஒரு பிரச்சனையும் இல்லாமல் கடலைக்

கடக்கவேணும்'' எனக்கு ஒரு பிரச்சனையும் ஏற்படாட்டி மூன்று வெள்ளிக்கிழமை தொடர்ந்து விரதமெடுத்து நல்லூருக்கு வருகிறேன். முருகா நீதான் காப்பாற்ற வேண்டும்.''

சுந்தரம்பிள்ளை மனதிற்குள் வேண்டி நேர்த்தி வைத்துக் கொண்டிருந்த நேரம்.

''அப்பனே... ஆண்டவா நீதான் என் செல்வங்களுக்குத் துணை. எங்களுக்கு பாதுகாப்புத் தாறன் எண்டு திரியும் இந்தப் பிள்ளைகளை நீதான் காத்தருள வேண்டும். இன்னும், என்றும் இக் கடலில் ஒருவருக்கும் ஒரு தீங்கும் வரக் கூடாது.''

யாரோ வாய் விட்டுக் கோரும் கோரிக்கையை கேட்டு சுந்தரம்பிள்ளை திரும்பிப் பார்த்தார். அங்கு சுமார் நாற்பது நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி மறையும் சூரியனைப் பார்த்து வேண்டிக் கொண்டிருந்தாள். சுந்தரம்பிள்ளை தனது வேண்டுதலையும், அப் பெண்ணின் வேண்டுதலையும் கேட்டு வெட்கிப் போனார்.

''நான் எவ்வளவு பெரிய சுயநலவாதி''

படகு புறப்பட்டு விட்டது. கரையில் தனக்கருகில் நின்ற பெண் படகிலும் கூட வருவதையும், எல்லாருமாக பதினான்கு பேரும் சாமான்களோடும் படகு பயணிப்பதையும் சுந்தரம்பிள்ளை கவனித்துக் கொண்டார். படகிலிருந்த பதினான்கு பேருக்கும் முகத்திலொரு பயமிருந்தது. அவரவர் தமது குல தெய்வங்களை வழிபட்டுக் கொண்டிருப்பதாகவே சுந்தரர் நினைத்துக் கொண்டார்.

படகு நீரில் மிதந்து நீரையும், அலைகளையும் கிழித்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. சுந்தரம்பிள்ளை தனது பார்சல்களைப் பார்த்தார். பேக்ரெண்டும் அணியத்திலுள் இருந்தன அவை வெளியில தெரியவில்லை. ஆனால், கொழும்பில் ''நல்ல கார்ட்டில் மலிவு விலையில்'' அடித்து வரப்பட்ட பத்திரிகை பார்சல் மட்டும் நல்ல பொலித்தீன் பையில் கட்டப்பட்டு அவர் பார்வை பட்டுக்கொண்டிருந்தது.

படகு வேகம் பிடித்திருந்தது. கரையில் தெரிந்த வெளிச்சங்கள் சிறிது சிறிதாக குறைந்து கொண்டிருந்தது. இப்போது பெரிய பெரிய அலைகளில் 'போர்ட்' துள்ளி விழுந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆழ்கடலை அடைந்து விட்ட நிலையில்,

''இண்டைக்கு இவன் இன்னும் 'ப்போக்கஸ்' அடிக்கையில்ல. ஏனெண்டு தெரியல்ல''

அங்கிருந்த ஒருவர், இன்னொருவரிடம் கூறிக் கொண்டிருந்தார். திடீரென, அணியத்திலிருந்த ஓட்டியின் வழிகாட்டி...... ''அண்ணே .. .. திருப்பு ..... திருப்பு ..... நேவிக்காரன் வாறான் திருப்பு ''

உடனே படகு தனது பாதையிலிருந்து விலத்தியோடியது. படகிலிருந்தவர்களின் இதயங்கள் பயத்தினால் வேகமாக அடித்துக் கொண்டன. தத்தமது கடவுள்களை ஒவ்வொருவரும் வாய்விட்டுக் கூப்பிட்டனர். சில பெண்கள் அழத் தொடங்கினர். நீச்சல் தெரியுமோ .. தெரியாதோ . அனேகமானவர்கள் கடலில் குதிப்பதற்கு வழி பார்த்தனர். ஒருவர் அணியத்திலிருந்த சாமான்களை அகற்றி விட்டு அதில் ஒளிவதற்கு வழி தேடினார்.

சுந்தரம்பிள்ளையின் கை கால்கள் உதறின .. நல்லூரானையும் நயினை அம்மனையும் கூப்பிட்டார். பதறிய மனத்துடனேயே தனது பார்சலைப் பார்த்தார். அது மட்டும் அமைதியாக, கவனமாக இருந்தது!

''கரைக்கு திருப்பச் சொன்னா நீயேன்டாப்பா தொடர்ந்து கடலிலே ஓட்டிறனீ?''

பயணிகளில் ஒருவர், ஓட்டியைப் பார்த்து ஆத்திரத்துடன் கூற.........

அது பிரச்சினையில்லை அங்க கடற் புலிகள் போகுது. இனி எங்களுக்கு பயமில்லை!''

ஓட்டி கூறியவுடன் தான் அனைவரது கண்களும் அத்திசைக்கு நோக்கின அங்கு.

'தீபாவளி, வருடப்பிறப்புக்களின் போது சிறுவர்கள் வானில் விடும் வாண வேடிக்கைகள் போல தொடர் நெருப்புப் புள்ளிகள் மூன்று திசைகளிலிருந்து ஒரு இடத்திற்குச் சென்று கொண்டிருந்தன. ஆனால் அந்த வொரு இடத்திலிருந்து மட்டும் நெருப்புத் துளிகள் விட்டு விட்டு மூன்று திசைகளுக்கும் பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தன.

''தொடர்ந்து சுடுவதுதான் நேவி, மூண்டு போர்ட்டில வந்திருக்கான, எங்கட பெடியள் நடுவில நிண்டு சண்டை பிடிக்குதுகள். அவன்கிட்ட நிறைய ரவுன்ஸ் இருக்கு அதான் தொடர்ந்து சுடுறான். எங்கட பெடியள் இருக்கிறதத்தானே அடிக்க வேணும். அதும் முடிஞ்சு போட்டா என்னத்த செய்யுங்கள்!? அதான் ஒவ்வொண்டா அடிக்குதுகள். எங்கட பெடியள் அடிக்கிற ஒவ்வொரு வெடியும் பிரயோசனமாத் தான் அடிக்குங்கள். நல்ல ஸ்பீட் போர்ட்டும் இருக்க வேணும் இந்த நேவிக்காரன் எந்த மூலைக்கு.''

அனுபவம் பெற்ற ஒருவர் கூறிக் கொண்டிருந்தார். அங்கு கடலில் பெரிய பெரிய வெளிச்சங்களும், சிறிய வெளிச்சங்களும் தெரிந்த வண்ணமிருந்தது.

''கடவுளே என்ர பிள்ளைகளைக் காப்பாத்து. அதுகள் எங்களுக்காக மரணத்தை இப்படித் தேடிப் போகுதுகளே, எண்ட பிள்ளைகளைக் காப்பாத்து கடவுளே!''

கரையில் வணங்கிய பெண், அழுத வண்ணம் கடவுளை இறைஞ்ச ஏனைய பயணிகள் அவளை இரக்கத்தோடு பார்த்தனர்.

சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் படகுப் பயணமும் நடந்து கொண்டிருந்தது. தெரியும் வெளிச்சங்களுக்குரிய சத்தங்கள் காதைப் பிளப்பனவாகத்தானிருக்கும், ஆனால், படகு இன்ஜின சத்தத்தால் பயணிகள் ஒருவருக்கும் அது விளங்கவில்லை.

தொடர்ந்த வெளிச்சங்கள் மத்தியிலே திடீரென பெரியதொரு வெளிச்சம்...!! மின்னல் தோற்றுப் போகுமாற் போலத் தோன்ற கடலும் ஒரு முறை அதிர்ந்து அமைதியுற்றது. பின் கொந்தளித்தது. பயணிகள் முகங்களில் பயம், சோகம் இழையோடியிருந்தது. அப் பெரிய வெளிச்சத்தோடு சகலதும் அடங்க சண்டை முடிந்தது. படகுப் பயணம் தொடர்ந்தது.

சுந்தரம்பிள்ளை பெருமூச்சு விட்டவராக, பார்சலைப் பார்த்தார். அது கவனமாகவிருந்தது. கரையைப் பார்த்

தார். கிளாலிக்கரையிலுள்ள வெளிச் சங்கள் தெரியத் தொடங்கின.

''நான் சொன்னனான் தானே! இங்க அடிச்சிருந்தா 'கார்ட்' இவ்வளவு வடிவாயிருக்குமே! அடிச்சதே அடிச்சனீங்கள் ஒரு ஐநூறு கூட அடிச்சிருக்கலாம்.''

கற்பகம், சுந்தரம்பிள்ளை கொழும்பிலிருந்து கொண்டு வந்திருந்த கல்யாணப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுந்தரம் பிள்ளை குளித்துவிட்டு வந்தமர்ந்தவர் அன்றைய ''ஈழநாதம்'' பத்திரிகை கிடப்பதைக் கண்டு.... அதை படிக்கத் தொடங்கினார். அதில்.....

''இரவு கிளாலி கடலில் கடற்படை படகு கரும்புலித்தாக்குதலால் நிர்மூலம் - இரவு கிளாலிக் கடலில் பயணம் செய்துகொண்டிருந்த மக்களைச் சூறையாட வந்த சிறிலங்கா கடற்படையினரை கடற்புலிகள் மறித்து தாக்குதல் - நடாத்தினர். இத்தாக்குதலில் கடற்படைக்குச் சொந்தமான நீருந்து விசைப்படகு (வாட்டர் ஜெட்) புலிகளின் கரும்புலித்தாக்குதலால் நிர்மூலமாக்கப்பட்டது.''

-என்று பிரசுரமாகியிருந்தது சுந்தரம்பிள்ளை நிமிர்ந்து இருந்தார். அவரின் கண்களில் கற்பகமும், அவள் கையிலிருந்த கல்யாணப்பத்திரிகையும் சின்னஞ்சிறிதாகத் தெரிய அவரின் மனக்கண்ணில் தெரிந்த அந்தக் கரும்புலி பெரிதாகத் தெரிந்தான். காரணம் அக் ''கோடடித்த'' பேப்பரில் வந்த செய்தியே!!!

*நன்றி: ஈழநாதம் (வன்னிப்பதிப்பு) ஓராண்டு நிறைவு மலர்*

□□

## நாயகர் நினைவு




வான் மீது கவியும் மேகங்களே - புலிவீரர்
தமை நீங்கள் பாடுங்களேன்
துயர் மீறி விழிநீர் சிந்தலாமோ?
அயர்வோடு களையோடு நாம் சாயலாமோ?
களமாடி விதையான புலிவீரர் தனையே
கானங்கள் கனிந்து இசை பாடி மகிழுங்களேன்
வெம் புயலோடும் சதிராடி விளையாடுகிறார்
இனிவான புதுயுகம் புக களமாடுகிறார்
வான் மீது கவியும் மேகங்களே - புலிவீரர்
தமை நீங்கள் பாடுங்களேன்.
வான் மீது போடும் சௌந்தர்ய கோலங்களே
எமதீழம் மலரும் இனிதான பாடங்களாம்
காலங்கள் கனிந்து நாளை விடியும்
சின்னஞ் சிறு தளிர்கள் புயலாய் சீறுகிறார்
எழில் கன்னி இள மலர்கள் பகை வீடு சாடுகிறார்
கனல் மூழ்கியுமே வேள்வியில் ஆகுதியாகின்றார்
புள்ளினம் விடியலைப் பாடும் பாடும்
புலர் பொழுதுகள் நாளை விடியும் விடியும்
நாயகர் நினைவு ஓவியமாகும்.

பவித்திரன்

□□

# ஈழ இதயம் பிடித்த புலி வீரனின் புகைப்படம்




ச. வே. பஞ்சாட்சரம்

எற்படமாய் ஈழத்தாய் இதயம் உனைப்பிடித்த
சொற்படந்தான் இதுபாராய் சோராப் புலிவீரா!
ஒருதாய்கொள் பலசேய்க்குள் ஒருசேய் நீ அல்லை. எண்ணி
உருகுபல தாய்பெற்ற ஒரு சேய்க்குள் ஒருசெய் நீ!

குழப்பிடும் உன் மண்மீட்கும் கொள்கையினை என்பதனால்
ஒளித்துன்தாய், குடும்பத்தில் ஒட்டாமல் திரியும் நீ,
மண்மீட்கும் உன்பற்றை வைரிக்கச் செய்வதனால்
தன்னெனவே ஊர்த்தந்தை தாயரிடம் ஒட்டுகிறாய்!

உந்துவில்ஈர் உருளியிலே உன்கால்கள் தேடீழம்
சொந்தக்கால் இல்லையெனில் துதிக்கப்போய்த் அடிக்கிறது!
சில்லுடைந்த வண்டியெல்லாம் தெருவோரத் தவமுனிவர்!
சில்லுடைந்தும் நீ வானில் திரிந்தடிக்கும் ஏவுகணை!
தப்பாத வெற்றிபெறும் தாக்குதலைச் சயினைற்றுக்
குப்பிக்குங் கொடுத்த இன்றைக் குமணவள்ளல் மார்நீங்கள்!

அந்நியனை நோக்குதல்போல் ஆசைகளை நோக்குகிறாய்.
தன்னொருவன் ஆட்சிக்காய்ச் சனித்ததிந்த நாடென்ற
மன்னவர்தம் மமதைகொல்லும் வரலாற்றுத் தொடர்கதைதன்
பின்னிணைப்பு நீ! செயலால் பேசாமற் பேசுபவன்!
கொழுத்தவனே வாழுகின்ற குவலயத்தின் வரலாற்றை
அழித்தெழுதும் போர்முறையை அகிலத்துக் கீந்தவன் நீ!
உன்விஸ்வ ரூபத்தில் ஒங்கு அதர்மச் சாம்பல்மலை
தன்னிலெழுந் தழகுமணம் தருங்கொள்கை மலர்வனங்கள்

சமூத்திரப்பே ரலைக்குதிப்பும் தாவாதன் முழங்கால் மேல்
இயமஉச்சி யும் உன்றன் இடுப்புக்குங் கீழேதான்!
தன்னையே கெடுக்கின்ற "நான்" கொண்டோம் மலிகாலம்
உன்னையே கொடுக்கின்ற நான்மட்டும் உடையவன்நீ!
இனிமையெல்லாம் குத்தகையாய் எடுத்துநிற்கும் காய்தான்நீ
கனிகளில்தான் இனிமையென்ற கதைபொய்க்க வைத்தவன்நீ!
வக்கணையும் வாழ்த்துகளும் வழுக்கிவிழும் வழுக்குமரம்!
மக்களுக்காய் மக்களினால் மக்களுக்கென் றானவன்நீ!

**"விடுதலைப் போர்' என்பதன் ஆன்மாவை எட்டிப் பார்ப்பதாயின் ஆத்ம சுத்தியோடு அதில் ஈடுபட வேண்டும். அந்த ஈடுபாட்டின் விளைவாக எழும் நாடகங்கள் நிச்சயமாக மக்களின் ஆத்மாவைச் சென்றடையும்".**



# நேர்காணல்

## குழந்தை. ம. சண்முகலிங்கம்

□
□
□

# நேர்முகம்

## கருணாகரன்

● தங்களின் கலையுலக வாழ்வு பற்றி கணிசமாகப் பலரும் அறிந்துள்ளதால், சண்முகலிங்கம் என்ற கலைஞனின் உருவாக்கத்தையும் அதனுடைய தோற்றுவாயையும் தங்களின் குடும்ப வாழ்க்கை பற்றியும் கூறுங்கள்?

□□ எனது குடும்பம் கலைக்குடும்பமல்ல. தாய்தந்தையர் சினிமாவே பாராது போனவர்கள்; பாவமென்று கருதியவர்கள். பதினேழு வயதில் தான் நான் முதன்முதலாகப் படம் பார்த்தேன். கல்லூரியில் பார்த்த ஓரிருநாடகங்கள் தவிர வேறு பார்க்காதவன். கூத்துக்கள் இளவயதில் பார்த்ததே இல்லை. நாடகத்தில் நாட்டம் கொண்டு பிரவேசித்தவனல்ல நான். எனது அயலில் இருந்த முதியவர் ஒருவரை நான் பாவனை பண்ணிக்காட்டுவதைக்கண்ட ஒருவர், என்னை திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கம் தயாரிக்கும் நாடகத்தில் வற்புறுத்தி நடிக்கவைத்தார். கிழவன் பாத்திரம் கிடைத்தது. தொடர்ந்து பல நாடகங்களில்

அந்த வேசம்தான்.
விதானை க. செல்வரத்தினம் என்னைத் தன்னோடு இணைத்துக்கொண்டார்.
நகைச்சுவை நடிப்புக்கான பாத்திரங்கள் தான் அவருக்கும் எனக்கும் கிடைக்கும் அதற்கான தண்டனையை அனுபவித்து வருகிறார். பணம் 'சம்பாரிக்க'வில்லை என்ற ஒரு மனக்குறை இருப்பினும் மனைவி மக்கள் என் நாடகமுயற்திகளுக்குத்

குழந்தை ம. சண்முகலிங்கம் தமிழுலகம் தலைநிமிர்ந்து 'என் பிள்ளை இவன்' என்று பெருமைப்படக்கூடிய பெருங்கலைஞர். தமிழ்நாடக வாலாற்றின் தொடரோட்டத்தில் இவரதுகாலமும் பணியும் என்றென்றும் மறக்கமுடியாததும் மறைக்கமுடியாததுமாகும். ஈழத்து தமிழ்நாடகத்தை காலத்தின் தேவையுணர்ந்து அதை மாற்றியமைத்து, உலகத்தின் ஒத்திசைவுக்கு திசை திருப்பிய ஆளுமைமிக்க கலைஞர்களில் இவர் முதன்மையானவர்.

'உண்மையான மனிதராக வாழ்ந்து, உன்னதத்தின் பிரதிநிதியாகத் தன்னை அடையாளம் காட்டி நல்ல கலைஞனின் வாழ்வுக்கு உவமையானவர். ஈழத் தமிழ்த் தேசியப் போராட்டத் தோற்றுவாய்க் காலங்களில் போராட்டத்திற்கு உறுதுணை சேர்க்க 'மண்சுமந்தமேனியர்' நாடகத்தை எமக்கு அளித்தவர். 'நாடக அரங்கக் கல்லூரி'யின் பிதாமகரில் ஒருவர்.

'அன்னைஇட்டதீ', 'எந்தையும் தாயும்,' 'யார்க்கொடுத்துரைப்பேன்' போன்ற பல தரமான நாடகங்களைத்தந்தவர். சிறுவர் நாடகங்களையும் பாடசாலை நாடகங்களையும் அதிகமாக அளித்த பெருமை இவருக்கு உண்டு. தற்பொழுது யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

தன் தலையின் மணிமுடி உச்சங்களை உரசிக்கொண்டபோதும் வேர்களை எம் புழுதிமண்ணிலே பரப்பிநிற்கும் எம் மண்ணின் மனச்சாட்சி இவர்.

எங்கள் உரையாடலை நாங்கள் இருவரும் ஒத்திகையின் போது பேசிப்பேசி உறுதி செய்துகொள்வோம். ஏனைய நடிகர்களின் உரையாடல் எழுதப்பட்டிருக்கும்.
நாடகநடிகன் என்பதை அறிந்திருந்தும் என் மனைவி என்னைக் கட்டிகொண்டார். தடையாக இருப்பதில்லை. விமர்சகர்களாக இருப்பதுண்டு. இனி, நான் நாடகத்தைவிட்டாலும் நாடகம் என்னை விடாது போல் தெரிகிறது.

● தலைசிறந்த கலைஞர்கள் அனைவரிடமும் சொல்லத்துடிக்கும் செய்தி

கள் சில இருக்கும் என்பதை நாம் அறிவோம். தாங்கள் சொல்லத்துடிக்கும் செய்தியாக கருதுவதைக் கூற முடியுமா?

□□ "சமூக விழுமியங்கள்", "எமது பாரம்பரியங்கள்" என்ற பொன்முலாமிட்ட பதங்களுள் நாம் முடி மறைத்து வைத்துக்கொண்டு நடைமுறைப்படுத்தும் சின்னத்தனங்களை வெறுக்கிறேன். இச்செயல்களால் சிதைந்து போகும் மனித உறவுகளை, மனித நேயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் — சீதனம், சாதி, சுயநலம், ஆளுமையைச் சிதைக்கும் அன்னியக்கல்விமுறைமை, பெண்ணை ஒரு சாதியென நோக்கும் பான்மை, என்பவற்றால் தன்னிலிருந்தே தான் அன்னியப்பட்டிருக்கும் எங்கள் மனிதர்களில் பலரை நான் விமர்சிக்கிறேன். தங்கள் "பிணிகளை"யும் "துயரங்களை"யும் கண்டுகொள்ளாத மக்களைக்கண்டு வருந்துகிறேன்.

● போராட்டங்கள் நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற நாடுகள் அனைத்திலுமே நாடகமே முதன்மைக் கலை வடிவமாக இருந்துள்ளது; இருந்து வருகின்றது. எமது தாயகமும் விடுதலைக்காக விலை கொடுத்துக்கொண்டிருக்கிறது. இங்கு நாடகங்களின் பங்களிப்புப் பற்றி தங்களின் கருத்தென்ன?

□□ மனித வாழ்வினை மிகவொத்ததாக நாடகம் இருப்பதால் அது மக்களைக் கவரும் தன்மையினைத்தன் இயல்பில் கொண்டுள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த காலங்களில் பலராலும் சுயாரிக்கப்பட்ட நாடகங்கள் பலவற்றின் தரத்தினையும், தன்மையினையும், பின்னர் வந்த பல நாடகங்கள் அடையத்தவறிவிட்டன. எந்தவொரு நடவடிக்கையும் ஆரம்பத்தில் ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் நிறைந்ததாக இருந்து, காலத்தின் வளர்ச்சியோடு ஆழ்ந்த அமைதியும், காத்திரத்தன்மையும், கனதியும், செறிவும் கொண்டு உணர்வுபூர்வமாக வளர்வது இயல்பு. எமது ஆயுதப்போராட்டம் அத்தகையமுறையில் வளர்ந்து வருகிறது எனலாம். இதே அளவுகனதியும், செறிவும் கொண்ட நாடகங்களை நாம் படைக்கவில்லை. நாடகம் காலத்தின் உணர்வினைப் பிரதிபலிக்கவும் வழிநடத்தவும் தவறிவிட்டது. இன்னும், வெறும் 'ஆர்ப்பரிப்பு' நாடகங்களே பெருமளவில் மேடையேறுகின்றன. இதற்கான காரணங்கள் இரண்டைக்கூறலாம்—

1. நாடகக்கலைஞர் பலருக்கு, எமது மக்களின் விடுதலையில் - எத்தகைய துயரங்களையும் தாங்கிக் கொண்டு, கௌரவத்தோடு நாம் வாழக்கூடியதொரு அமைதிக்காகக் காத்திருக்கும் வேட்கையில் — சத்தியத்தோடுகூடிய நம்பிக்கை இல்லை.
2. விடுதலையில் உண்மையான நம்பிக்கை உள்ள பல கலைஞர்களுக்கு தேசவிடுதலை என்பதன் முழுப்பரிமாணமும், நாடகக்கலையின் முழுப்பரிமாணமும் தெரியாதிருக்கிறது.

பல நாடகங்கள் "சண்டை" பற்றிச் சொல்கின்றனவே அன்றி — சண்டையைக்கூட அவை ஆழமாக நோக்குவதில்லை— "விடுதலைப்போர்" என்பதன் ஆன்மாவை எட்டியும் பார்க்கவில்லை. எட்டிப் பார்ப்பதாயின் நாம் ஆத்மசுத்தியோடு ஈடுபடவேண்டும். அந்த ஈடுபாட்டின் விளைவாக எழும் நாடகங்கள் நிச்சயமாக மக்களின் ஆத்மாவைச் சென்றடையும்

**● தமிழீழத்தில் தரமான அதிக நாடகங்களை உருவாக்கியவர் என்ற பெருமை உங்களுக்கு உண்டு. நாடகத்துறையின் உச்சவளர்ச்சிக்குசெய்தாக வேண்டுமெனத் தாங்கள் கருதும் பணிகளைச் சொல்லுங்கள்?**

□□ நாம் நாடகத்தில் சென்றடைய வேண்டிய எல்லைகள் தொலைவில் உள்ளன. அனைவரும் இணைந்து முயன்றால் அவற்றை அடையமுடியும். நாம் எதையுமே செய்துவிடவில்லை எனக்கூறவும்முடியாது. ஆயினும் கலைஞர் தம்மைத்தாம் முதலில் கண்டறிந்து கொள்ளவேண்டும். தம்மைத்தாம் விமர்சிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும். தன் புகழுக்காக தற்பெருமையோடு கலையில் ஈடுபட்டால் கலையும் வளராது, தானும் வளரமுடியாது. சுயநலம் கலைஞர்களைக் கெடுத்து விடுகிறது. ''வறிய இதயம் வேண்டும்'' என்று ஒரு அறிஞர் சொன்னார். எங்கள் உள்ளங்கள் முற்கற்பிதங்களும், அகந்தையும், சுயநலமும் குடிகொண்டதாக இருப்பின், நல்லவற்றை அங்கு சேர்க்கமுடியாது போய்விடும். நாடகக் கலைஞர்கள் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். தன்கலைத்துறையோடு தொடர்புடைய அனைத்தையும் அறிந்து கொள்ளவேண்டும். நல்ல இதயமுள்ள அறிஞர்களாக எம்மை ஆக்கிக்கொள்ளவேண்டும். 21 ஆம் நூற்றாண்டின் கலைகள் யாவும் அறிவுநிறைந்தவர்களின் ஆக்கங்களாகவே இருக்கப்போகின்றன என்பது, பல நாடுகளிலும் இப்பவே தெரியவந்துள்ளது. நாமும் எமது யன்னல்களைத்திறந்து விடவேண்டும். உலகின் பல பண்பாடுகளின் தேடல்களையும் அறிந்து கொள்ளவேண்டும். அந்த அறிவின் விசாலத்தில், எமது பண்பாட்டின் வேர்களையும், சாரத்தையும் கலந்து, புதியனபடைக்கவேண்டும். அரங்கின் மொழியை அறிந்து, அந்த மொழியின் கவித்துவ அழகை வெளிப்படுத்தவேண்டும். வெறும் நுட்பங்களின் தொகுதி கலையாகிவிடாது. பார்த்ததைப் பாவனை செய்தல் கைவினைஞனின் செயல். பார்த்ததைக்கொண்டு புதியது படைத்தல் கலைஞனின் பணி. பார்த்தவை, கேட்டவை, கற்றவை யாவும் செரித்து, தன்குருதியில் கலந்த பின்னரே படைப்பில் ஈடுபடவேண்டும்.



செரிக்கமுன்படைத்தால், உட்சென்றவை, சத்தி (வாந்தி) போல், அப்படியே வெளிவந்துவிடும்.

எமது கலை பண்பாடு என்பன உலகக்கலை, பண்பாடு என்பதன் ஒரு பகுதி என்பதை உணரவேண்டும். எமது தனித்துவம் என்பது, உலகப் பொதுமையிலிருந்துமுற்றாக விலகிநிற்பதல்ல.

**● கலையரசு சொர்ணலிங்கத்தின் முதன்மை மாணாக்கன் என்றபெருமை**

உங்களுக்கு உண்டு. இவருடைய தொடர்பு, பழக்கம், அவரிடம் பெற்றவை இவைபற்றி எடுத்துச்சொல்ல முடியுமா?

□□ முதன்மை மாணாக்கனாக அமையும் பேறு எனக்குக் கிடடவில்லை. ''சானா'' என்ற சண்முகநாதனையும் விதானையார் செல்வரத்தினத்தையுமே 'கலையரசு' தனது முதன்மை மாணாக்கராகக்கருதினார். நான் பலருள் ஒருவன் மட்டுமே.

கலையில் நாட்டமுள்ளவர்களை இனம்காணும் திறன், அவர்களை உற்சாகப்படுத்தும் மனம், சிறயவரோடும் நட்புடன் பழகும் பெருந்தன்மை, நாடகங்களைப்பார்த்து நடிகரை உற்சாகப்படுத்தும் மேன்மை அவரிடம் இருந்தது. கலைஞர்களிடம் கட்டுப்பாட்டை, ஒழுங்கை, ஒழுக்கத்தை அவர்வலியுறுத்துவார். நீண்ட, கடுமையான நாடக ஒத்திகைகளை நடத்துவார். நாடகத்தயாரிப்பின் சகல அம்சங்களிலும் அவர்கவனம் செலுத்துவார். அனைத்துத்துறையிலும் அவருக்கு அறிவும், அனுபவமும், ஆற்றலும் இருந்தது. தான்நெறிப்படுத்திய நாடகங்களில் சிறிய பாத்திரங்கள் ஏற்று எம்மோடு சேர்ந்து நடித்து எம்மைக் கௌரவிப்பார். அவரோடு சேர்ந்து நடித்தது உண்மையில் பெரும் பேறு. அவரது இல்லம் ஒரு நாடகசாலை போன்றே இருந்தது. ''அமைதிப்படை'' அவர்தேடி வைத்திருந்த அனைத்துக்கலை ஆவணங்களையும் அழித்துவிட்டது. நாடகம் மனிதனை உருவாக்கவேண்டும் என்பதை தனது செயல்களால் எமக்கு உணர்த்தியவர் அவர். அவரது எச்சங்களாக நாம் இருக்க முயல்வதுதான் எமது பணி. 1958 இல் கலையரசு என்னை ஆள்விட்டு அழைத்து, பி. ஸ். ராமையா எழுதிய 'தேரோட்டிமகளில்' அருச்சுனனாக நடிக்கும்படி பணித்தார். அன்று ஏற்பட்ட தொடர்பு 96 வயதில் அவர் இறக்கும் வரை தொடர்ந்தது. எங்கள் வரவுக்காக அவர் காத்திருப்பார். ''நீங்கள் வந்து என்னோடு ஒரு மணித்தியாலம் கதைத்தால் நான் ஒருவருடம் கூடுதலாக வாழ்வேன்'' என்பார். கடைசிவரை ''வாழ்ந்தவர்'' அவர்; வாழ விரும்பியவர் அவர்.

● புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உங்களின் நாடகங்களை ஆங்காங்கே மேடை ஏற்றி வருகிறார்கள். நீங்கள் இந்த மண்ணில் நிலைகொண்ட மக்களுக்குச் சொல்லத் துடித்தவற்றை புலம்பெயர்ந்தவர்கள் அங்கு மேடை ஏற்றும் போது எவ்வளவு தூரம் அவை பொருத்தமாகின்றன?

□□ எனக்குத்தெரிந்த வரையில் ''எந்தையும் தாயும்'' என்ற எனது ஒரு நாடகம் மட்டும்தான் கனடா, சுவிற்சர்லாந்து, லண்டன் போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது. அந்த நாடகம் கனடாவில் உள்ளவர்களது வேண்டுகோளுக்கமையவே எழுதப்பட்டது. அதன் இலக்குப் பார்வையாளர், புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளே. ஆயினும் அந்த நாடகத்தை நாம் இங்கு தயாரித்தபோது அது பலருக்குப்பிடித்திருந்தது. பலரது மனச்சாட்சியை உலுப்பியது. அது அங்கும் பலரது உள்ளங்களைத்தொட்டதாக, அந்நாடுகளில் தயாரித்தவர்கள் எழுதியிருந்தார்கள். இங்கு உள்ள மக்களுக்காக எழுதப்படும் நாடகங்கள் நிச்சயமாக

அங்குள்ளவர்களையும் கவரும், சிந்திக்கத்தூண்டும், தமது தாயகத்தை நினைந்து வருந்த வைக்கும் என்பது எனது நம்பிக்கை. புலம்பெயர்ந்த பலர் இந்த மண்ணையும் மக்களையும் தமது உறவுகளையும் மறக்கமுடியாதவர்களாகவே இருப்பார்கள். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது போன்றதொரு உணர்வு தனக்கு ஏற்பட்டதாக, 'எந்தையும் தாயும்' நாடகத்தை கனடாவில் பார்த்த ஒருவர் எழுதியிருந்தார். இங்குள்ள ஏனைய நாடகங்களைப் பார்க்கும் போதும் அத்தகைய உணர்வு அவர்களுக்கு நிச்சயமாக ஏற்படும்.

● மரபு நாடகம், நவீன நாடகம், மூன்றாம் உலக நாடகங்களுக்கான அரங்கத்தேடல், வீதி நாடகங்கள் என்றெல்லாம் நாடகங்களை வகைப் படுத்திக் கூறப்படுகிறது. இவைபற்றிய உங்களது விரிவான கருத்தென்ன?

□□ விரிவாகக் கூறுவதாயின் இதுவே தனிக்கட்டுரையாகிவிடும். எனவே சுருக்கமாகவே சிந்திக்கமுடியும். அனைத்து மக்கள் மத்தியிலும் தமக்கென்றதொரு மரபு அல்லது பாரம்பரிய நாடகம் இருக்கும். எமது மரபு நாடகங்கள் "நாட்டுக்கூத்து" எனப்படுகிறது. இதனுள் பல வடிவங்கள் உள்ளன. தேசிய இனமொன்று எழுச்சி கொள்ளும்போது தனது பாரம்பரியங்களைத் தேடிக்கண்டுகொள்ள முற்படுவது இயல்பு. இந்தப் பணியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடக்கிவைத்த பணிமுக்கியத்துவம் பெறுகிறது. எமது மரபு சார்ந்த கலைகளைப் பேணுவதாயின் அதனைப் பாரம்பரியமாக ஆடி வருகின்றவர்களை இனங்கண்டு ஊக்குவிப்பது அவசியம். எம்மத்தியில் இப்பணி, நன்கு வகுத்தமைத்துக் கொள்ளப்பட்டதொரு கொள்கைத்திட்டத்துக்கமைய நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆங்காங்கு சிலர் தமது மனம்போனவாறு செய்து வருகின்றனர். ஒரு பொறுப்புள்ள பொது நிறுவனமொன்று இப்பணியினை ஏற்றுச் செயல்முறைப்படுத்துவது அவசியம்.

எம்மத்தியில் 'நவீன நாடகம்' என்ற சொற்தொடர் நன்கு புரிந்து கொள்ளப்படாத ஒன்றாக உள்ளது. மேலைத்தேயங்களில், யதார்த்த நாடகங்களின் விளைவாக ஒரு மருட்கை அரங்கு தோற்றம் பெற்று, மக்களை வெறும் பார்வையாளர்களாக மட்டும் வைத்து, சிந்திக்க விடாத அரங்கமுறைமையாக இருந்ததை எதிர்த்து யதார்த்த விரோத அரங்க வடிவங்கள் தோற்றம் பெற்றன. அதன் முக்கியமுன்னோடியாக ஜேர்மன் நாடக மேதை பேர்டோல்ஃட் பிறெஃட என்பாரைக் கொள்ளலாம். இதனை உள்வாங்கி எழுபதுகளில் இங்கு தோற்றம் பெற்ற நாடகங்களையே பலரும் நவீன நாடகம் என்கின்றனர். மக்களைச் சிந்திக்கத்தூண்டும் புதிய அரங்கமொன்றுக்கான வடிவத்தைத்தேடிய பிறெஃட் அதில் கையாளக்கூடிய பல உத்திமுறைகளை ஜப்பானிய, சீன பாரம்பரிய அரங்குகளில் கண்டார். கீழைத்தேய அரங்குகள் யாவற்றிலும் இப்பண்பு பொதுவாகக்காணப்படுகிறது. இங்கு, "நவீன நாடகம்" என்று சொல்லப்படும் நாடகங்களுள் பல, எமது பாரம்பரிய நாடகங்களிலும், ஏனைய கலை வடிவங்களிலும் காணப்படும் ஆற்றுகை முறைமைகளையே பயன்படுத்துகின்றன. இதனை

அறியாத சிலர் 'நவீன அரங்கை'
அன்னியமானதொரு
அரங்கமென்றும், அது எமக்கு
அவசியமற்றது என்றும் கூறுகின்றனர்.
கற்றவர் என்று கருதப்படும் சிலரும்
இவ்வாறு கூறிவருவது
விசமத்தனமானதாகவும் விசனம்
தருவதாகவும் உள்ளது.

இங்கு இன்று காணப்படும்
பெரும்பாலான 'நவீன நாடகங்கள்'
எமது பண்பாட்டினதும் கலைகளினதும்
சாரத்தை எடுத்துத் தமது
அடிநாதமாகக்கொண்டே
படைக்கப்படுகின்றன. அவை உலகின்
அனைத்து கலை அனுபவங்களையும்
உள்வாங்கிக் கொண்டு, எமது
பாரம்பரியத்தில் அடிபதித்து நின்றே
படைக்கப்படுகின்றன. இடையில் வந்த
மேலைத்தேய யதார்த்தவாத மருட்கையுள்
தம்மை அறியாது சிக்குண்டபலர்,
இன்றைய நாடகங்களை வெறுக்க
முற்படுகின்றனர். அனைவரும்
சுயநலங்களையும், சொந்த
லாபநட்டங்களையும் களைந்தெறிந்துவிட்டு,
தேசநலனில், மக்கள் நலனில் அக்கறை
கொண்டு பேசவும், செயலாற்றவும்
முற்பட்டால் பல சங்கடங்கள்
கலையுலகிலிருந்து நீங்கும்.

மூன்றாம் உலக நாடுகள், குறிப்பாக
லத்தீன் அமெரிக்க நாடுகள்
தென்கிழக்காசிய நாடுகள், இந்தியா
ஆகியவை, தத்தம் மக்களின்
அரசியல், சமூக, பொருளாதார,
பண்பாட்டு நிலைக்கேற்ற
அரங்கவடிவங்களைத் தேடிப்படைப்பதில்
முனைப்பாக உள்ளன. அவை யாவும்
தத்தம் கலை மரபுகளின்
வேர்களைத்தேடுகின்றன. அத்தோடு
உலகப்பொதுமையானதொரு மக்கள்
அரங்கையும் தேடுகின்றன. பிறெஃடின்
அரங்கு மக்களோடு
ஏற்படுத்திக்கொண்ட தொடர்பு, நெருக்கம்
போதாது என்று அவைகருதுகின்றன.

மக்களும் கலைஞரும் இணைந்து
ஆற்றுகையைத்தீர்மானித்து
நடத்திச் செல்ல உதவும்
வடிவங்களைத்தேடுகின்றன. ஆதியில்
சமயக் கரணத்திலிருந்து
தோற்றம் பெற்ற அரங்கம் மீண்டும்
அத்தகையதொரு நிலையை
—பார்வையாளர் நிகழ்த்துவோர் என்ற
வேறுபாடு அற்றதொரு
அளிக்கைமுறையை - அடையவேண்டுமென
அவாவுகின்றனர். அவற்றுக்கான
முன்னெடுப்புக்கள் இங்கும்
ஆரம்பித்துவிட்டன. நாம்
அவற்றைப்பொறுமையோடு பார்த்து,
சிரத்தையோடு விமர்சித்து, எமது
மக்களுக்கு மிக அவசியமான
அவ்வடிவங்களை வளர்த்தெடுக்க
உதவவேண்டும்.
மக்களைத்தேடிப் போகும் நோக்கினை
அடிப்படையாகக்கொண்டே
வீதி நாடகங்கள் தோற்றம் பெற்றன.
அவை, மூன்றாம் உலகின் ஏனைய
அரங்குகள் போன்று தளைகளுள்சிக்குண்டு
கிடக்கும் மக்களைத் தேடிச்சென்று
சிந்திக்கக்தூண்டும் நோக்கம்
கொண்டவையாகவே உள்ளன.
இங்கு வீதி நாடகங்கள் ஏறக்குறை
பத்து ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டு வரினும்
குறிப்பிடக்கூடிய வளர்ச்சி
அடையவில்லை என்றே கூறலாம்.
தனித்து அவ்வடிவத்தில் மட்டுமே
ஈடுபாடு கொண்டு உழைத்துவரும்
குழுக்கள் இங்கு இன்னமும்
தோற்றம் பெறவில்லை.
மரபுநாடகங்கள், நவீன நாடகங்கள்,
மூன்றாம் உலகுக்கான அரங்கு,
வீதி நாடகம் என்று எதையும் நாம்
ஆடலாம். அனைத்தையும் இணைத்தும்
ஆடலாம். ஆடுவோர், கலைசார்ந்த
அறிவும், தேடலும், நேர்மையும்,
மக்கள் மீது பற்றும் கொண்டவர்களாக
இருப்பின், அவர்கள் படைக்கும்
படைப்புக்கள் எல்லாமக்களையும்
சென்றடையும், நன்மை பயக்கும்.

● தொடரும் தங்களது கலைஉலக வாழ்க்கையில் இந்த மண்ணின் விடுதலைக்கான கருத்தை, ஆங்காங்கே குறிப்பிடும் படியாக விதைத்துள்ளீர்கள். புதியதொரு சமூக அமைப்பொன்றுக்காகவும் தங்களின் கருத்தைக் கூறியுள்ளீர்கள். இன்று உயிர் கொடுத்துப் போராடும் இந்த உரிமைப் போராட்டத்துக்கும் உங்கள் பங்கு கணிசமானது. எனவே போராடும் தேசத்தின் கலைஞர்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

□□ கலை இலக்கியவாதி ஒருதனிமனிதனல்ல. அவன் ஒரு மக்கள் கூட்டத்தின் மனச்சாட்சியின்குரல்; மானுடத்தின் பிரதிநிதி. எந்த இன்னலும் இடரும், வசதியும் சலுகையும் அவனை நிலைதடுமாறச் செய்யாது, செய்யக்கூடாது. போராடும் தேசத்துக்கலைஞன் ஒருவகையினனாகவும், போராட்டம் இல்லாத தேசத்துக்கலைஞன் வேறொருவகையினனாகவும் இருக்கமுடியாது. மனிதன் எப்பொழுதும் மனிதனாகவே இருக்கவேண்டும். கலைஞனும் ஒரு மனிதனே. மனிதம் நிறைந்த மனிதன். அவன் மனத்தில் துணிவு இல்லாது, நேர்மைஇல்லாது, உண்மை இல்லாது எதையும் படைக்கமுன்வரக்கூடாது. தான் நம்பாததை, நயம் கருதிச் சொல்லக்கூடாது. நம்புவதை, துயர்கருதிச் சொல்லாமல்விடவும் கூடாது. சரியானதை எங்கும், எந்நேரமும், எவர்க்கும் சொல்லும் உண்மையான இதயம் இருக்கவேண்டும். மக்களை நம்பவேண்டும். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். கற்றதை அவர்களது மேன்மைக்காகப் பயன்படுத்தவேண்டும். இவற்றையெல்லாம் செய்வதாயின் கலைஞன் தனது மனச்சாட்சியை காலந்தோறும் தரிசித்தவாறு இருக்கவேண்டும். அதுவே அவனது வழிகாட்டி. அதைத்தன்னுள் கொன்று புதைக்கும் கலைஞனின் வாயிலிருந்து வருபவை 'நாறும்.'

● தாங்கள் புதுமையைத் தேடும் அவா மிகுந்தவராகக் காணப்படும் அதே நேரத்தில் பழமையின் புனிதப் பிரதிநிதியாகவும் காட்சி தருகின்றீர்கள். எடுத்துக்கொள்ளவேண்டிய புதுமைபற்றியும் கழற்றி விடவேண்டிய பழமைபற்றியும் கூறுங்கள்?



□□ புதியது என்று ஒன்று இவ்வுலகில் இல்லை; ஒருவர் சொல்லும் ஒவ்வொன்றும் எப்பவோ சொல்லப்பட்டுவிட்டது", என்று கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த றோமன் மகிழ்நெறி நாடகாசிரியர் டெரன்ஸ் என்பார் கூறினார். காலத்துக்குக்காலம் சொல்லப்படும் முறைமைகள் வேறுபடுகின்றனவே அன்றி, சொல்லும்

விஷயம் ஒன்றாகத்தான் உள்ளது. கெட்டவன் தீயதைச் சொல்ல, நல்லவன் நல்லதைச் சொல்வான். சிலசமயம் இருவரும் ஒன்றையே சொல்வார்கள்; ஆனால் இருவேறு நோக்கத்துக்காக. கடவுள் உண்டு என்று இருசாராரும் சொல்வர். கடவுள் இல்லை என்று சொல்பவர்களிலும் இருசாராரும் உள்ளனர். கோயில் பூசைசெய்பவன் கடவுட்சிலையை விற்பதும், கொள்ளையடித்த பணத்தில் கடவுட்சிலையொன்றை செய்வித்து கோயிலுக்குக் கொடுப்பதும் ஒன்றுதான். இதில் எது புதுமை, எது பழமை? இரண்டுமே வழமைதான். சரி, பிழை, உண்மை, பொய்; இந்த இரண்டும் எக்காலத்திலும் ஒன்றுதான். நடைமுறைகள் மாறுபாடும், ஒழுக்கம் என்றும் ஒன்றுதான் - அதாவது நல்லவை, கெட்டவை. நாம் என்ன நோக்கத்துக்காக ஒன்றைப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். நாட்டார் பாடல்கள், தேவாரதிருவாசகங்கள், பழமொழிகள், பலஸ்தீனக்கவிதைகள், பாரதிபாடல்கள் யாவும் எனக்கு ஒன்று போலத்தான் தெரிகின்றன. அவை எவற்றிலும் நான் கடவுளைத் தேடுவதில்லை; மக்களைத்தான் தேடுகிறேன்; மக்களின் இதய ஆழங்களைத்தேடுகிறேன்; அவர்தம் அவலங்களை, அங்கலாய்ப்புக்களை, எதிர்பார்ப்புக்களை, இறுமாப்புக்களை காண்கிறேன். அவற்றின் மூலம் இவற்றையே வெளிக்காட்ட முனைகிறேன். எமது பண்பாட்டின் மரபைப்புரிந்து கொண்டவர்கள் அதை நயக்கிறார்கள். புரியாதவர்கள் பழமை என்கிறார்கள். புதுமைகள் யாவும் பழமையின் மற்றொருவடிவம், வகை எனவே எனக்கும் தெரிகிறது - மராமரத்தின் ஆணிவேரின் நுனிக்கும், உச்சிக்கொப்பிலுள்ள இலைத்துளிருக்குமிடையிலுள்ள தொடர்புபோல. இவை இரண்டும் வேறு வேறு பொருள்கள் போலத் தோன்றினும், ஒரு உறவு இருக்கிறதல்லவா? அந்த உறவு, இரண்டையும் ஒன்றாக எண்ண இடம் தருவதில்லையா? இல்லை என்பவருக்கு இல்லை; உண்டென்பவருக்கு உண்டு. பழமையும் புதுமையும் அவ்வாறே.

● நாடக, அரங்கக்கல்லூரியின் பிதாமகர் என்ற பெயர் தங்களுக்கு உண்டு. இது பற்றியும், அதன் வளர்ச்சியில் தாங்கள் காணும் நிறைவு பற்றியும் கூறமுடியுமா?

□□ நண்பர்கள் சிலர் இணைந்தே நாடக, அரங்கக்கல்லூரியை ஆரம்பித்தோம். ஆ. தாஸீசியசின் பங்கும் பணியும் அதில் முக்கியமானது. பின்னர் கலாநிதி சி. மௌனகுருவின் பணி கணிசமானது. ஏனைய நண்பர்கள் இலைமறைகாயாக இருந்து கொண்டு, தமது பெயர் புகழுக்காக ஏங்காது, தொடர்ந்து இருந்து வருகிறார்கள். நட்பு, நம்பிக்கை, இவையே அதன் யாப்பு விதிகள். இதில் இணைந்து நின்ற, நிற்கின்ற இளைஞர்களது பங்கும் பணியும் முக்கியமானது. அவர்கள் இதனிடமிருந்து பெற்றுக்கொண்டவை அதைவிட முக்கியமானது. நாடகம் பற்றிக் கற்றுக்கொள்வதற்கு எதுவும் இல்லை; அது தானே வரும் என்ற நம்பிக்கையை அகற்றுவதற்காகவே இந்நிறுவனத்துக்கு ''நாடக, அரங்கக் கல்லூரி'' என்ற பெயரை வைத்தோம். 1978ல் பெரும் ''புதின''மாக இருந்த இப்பெயர், இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. பலர் நாடகத்தைப் பயில்கின்றனர். யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு பாடநெறியாகியும் விட்டது. க. பொ. த. உயர்தரவகுப்பில் பல மாணவர் பயில்கிறார்கள்.

வடஇலங்கைச் சங்கீதசபை பரீட்சிக்கும் பாடநெறிகளில் ஒன்றாக உள்ளது. புதிய நாடக முறைமைகளை யாழ்ப்பாணத்தில் பரவலாக்கவேண்டுமென்பதும் எமது நோக்கமாக இருந்தது. இன்று அது குறிப்பிடக்கூடியளவு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பாடசாலைகளில் நாடகத்தின் முக்கியத்துவத்தை உணரச் செய்யுமுகமாக, நாம்
''சிறுவர் நாடகம்''
''பாடசாலை நாடகம்''
என்பவற்றைப்பரவலாக்கியுள்ளோம். இவையாவும் பலரது உழைப்பால் விளைந்தவை; விளைந்து கொண்டிருப்பவை. நாடகப்பட்டறைகளை நாம் இங்கு அறிமுகப்படுத்தி, இன்று அவைபலராலும் விரும்பி ஏற்கப்படும் ஒன்றாக உள்ளன. நாடக, அரங்கக்கல்லூரியின் பணி தன்னிச்சையானதல்ல! நீண்ட நெடுங்காலமாக, வெவ்வேறு காலகட்டங்களிலும் நாடகக்கலையில் உண்மையோடு உழைத்த பலர் பதித்து வந்த தடத்தின் தொடர்ச்சியே இது. இப்பாதை இன்னும் பல தூரத்திற்கு அமைக்கப்படவேண்டியுள்ளது. அது தொடர்ந்து, பல இன்னல்களை எதிர்கொண்டு அமைக்கப்படும் என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கை நிறைவைத்தருகிறது. இடர்கள் எமக்குத் துணிவைத்தருகின்றன.

● தங்களது அடக்கமும், விளம்பரம் தேடாத வினயமும் தங்களது முழுமையான ஒளிவீச்சுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது என்று கருதுகின்றோம். இதுபற்றி உங்கள் பதில் என்ன?

□□ தனிநபர் முக்கியமானவரல்ல. அவர் சார்ந்திருக்கும் நிறுவனம்கூட முக்கியமல்ல. அவரின், அந்நிறுவனத்தின் பணிகளே முக்கியம். அப்பணிகள் தேவையான விளம்பரத்தைதேடிக் கொள்ளும். எங்கள் சமூகத்தில் ஒரு சாபக்கேடு இருந்து வருகிறது. ஊரை ஏமாற்றிப் பிழைக்கின்ற எல்லாரும் நிறையப்பட்டங்களைச் சூட்டிக் கொள்கிறார்கள். இன்று சிலர் வேண்டிவைத்திருக்கின்ற பட்டங்களைப்பார்த்தால்,
''எல்லாம் அறிபவர்''
''எல்லாம் தெரிந்தவர்'' என்று கருதப்படும் கடவுளை விஞ்சியவர்களோ இவர்கள் என எண்ணத் தோன்றும், ''நான்'' என்ற அகங்காரத்தை ஒழிக்க உதவவேண்டிய ஆலயங்கள் அகந்தையை ஊட்டும் பட்டங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கின்றன. எங்கள் மனிசருக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஒருபுறம் தம்மையே ஆகுதியாக்கும் இளநெஞ்சங்களின் தியாகம்; மறுபுறம் விளம்பரம் நாடும் பழசுபட்ட மனங்களின் பட்டம், பதவி வேட்கை. எனக்குக்கிடைத்திருக்கும் ''ஒளிவீச்சு'' என்பணிகளின் காத்தையும் அளவையும் விஞ்சியவை எனக்கருதி அஞ்சுகிறேன் நான். இதற்குத் தகுதியுடையவனாக்கிக் கொள்ள என்னால் முடியாது. எனது ஆற்றல், ஆற்றலின்மை பற்றி எனக்குத் தெரியும் என நினைக்கிறேன். எனக்குத் தெரியாது போனாலும் என் மனச்சாட்சிக்கு நிச்சயம் தெரியும்.

● நல்ல கலைஞனாக இருப்பதிலும் பார்க்க முதலில் நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

□□ நல்ல கலைஞனாக இருப்பதென்பது நல்ல மனிதனாக இருப்பதை விடச்சுலபமானது. தான் நல்லவனாக இல்லாத ஒருவனுக்கு மக்களுக்கு உபதேசம் செய்யும் உரிமை கிடையாது.

நல்லவனாக இருப்பதென்பது எல்லார்க்கும் நல்லவனாக இருப்பதென்பதல்ல. எல்லாரும் 'நல்லவன்' என்று சொல்லிக்கொள்ளுமாறு நடப்பதல்ல. எல்லாரையும் திருப்திப்படுத்த முயல்பவன் எவரையுமே திருப்திப்படுத்தமாட்டான். அவன் ''படு கள்ளனாகவே'' இருப்பான், கலைஞர்கள் நேர்மையானவர்களாக இருக்கவேண்டியது அவசியம். இதனை, வேறுபல வினாக்களுக்கான விடைகளில் வலியுறுத்தியுள்ளேன்.

● உண்மையான கலைஞன் எப்படி இருப்பான்?

□□ பாரதிபோல் இருப்பான். தந்தையர் நாடு என்றதும் அவனிடத்தில் ஒரு சக்திபிறக்கும். தொல்லை இகழ்ச்சிகள் தீர, தொண்டு நிலைமையைத் தூவென்றுதள்ளி, அடிமையின் மோகத்தை மடித்து, வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் வேட்கைகொள்வான். நிலை கெட்டமனிதரைக் கண்டு நெஞ்சு பொறுத்திடமாட்டான். சிறுமை கண்டு பொங்கிடுவான். எளிமைகண்டு இரங்குவான். ஒளிபடைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும், தெளிவுபெற்ற மதியும் கொண்டவனாக இருப்பான்.

● நாடகக் கலைஞனான தங்களுக்குள் நல்ல கவிஞன் குடியிருப்பதாக நாங்கள் உணர்ந்துள்ளோம். அந்தக் கவிஞனையும் தாங்கள் உயிர்வாழச் செய்திருக்கலாமே. இந்த ஓரவஞ்சகம் பற்றி உங்கள் கருத்து என்ன?

□□ நடிகனாக வந்தது தற்செயலாக. நாடகாசிரியனானது வேறு வழி இல்லாமல் எழுத்தாளர்கள் நாடகம் எழுதாததால் நான் எழுத நேர்ந்தது. நல்ல கவிதைகளைப் படிக்கும் போது ஏக்கம் பிறப்பதுண்டு. எழுதத்துணிவு வரவில்லை. அதனால் என்ன? இப்ப என்ன வயதாபோய்விட்டது? நாற்பத்தைந்தில் தீவிரமாக நாடகம் எழுதமுற்பட்டவன்தானே! அறுபத்தைந்தில் கவிதையையும் கெடுத்துவிட்டுப்போவோமே!

● நாடகப் படைப்பாளிகளையும் பார்க்க இந்த மண் நாடக விமர்சகர்களை அதிகம் கண்டுள்ளதே, இந்த விபத்து எப்படி ஏற்பட்டது?


□□ கவிதை, சிறுகதை, நாவல் எழுதினால் பத்திரிகை, சஞ்சிகைகளில் உடனடியாகப் பிரசுரமாகிப் பார்வையாளரை விரைவில் சென்றடைகிறது. நாடகம் எழுதினால் நடிகர், நெறியாளர், ஏனைய அரங்கக்கலைஞர்களை ஒன்றிணைத்து, நீண்டநாள் ஒத்திகை பார்த்து, மண்டபம் எடுத்து, பார்வையாளரை ஒன்று சேர்த்து அதன் பின்னர்தான் படைப்பு பார்வையாளரைச் சென்றடைகிறது. 1980 ல் எழுதிய ''பாரதியின் பாஞ்சாலிசபதம்'' 1994 இல் தான் பார்வையாளரைச் சென்றடைந்தது, இதனால் இங்கு ஆரமபத்தில் நாடகம் எழுதிய நல்ல எழுத்தாளர்கள் பின்னர் அதைக் கைவிட்டு விட்டனர். ''சொக்கன்'', கவிஞர் முருகையன் மட்டும் இதற்கு விதிவிலக்கு. நிச்சயமாக நல்ல கவிஞர்கள் நாடகம் எழுதவேண்டும். அப்பொழுதான் நாடகமொழி செழுமை பெறும். கவிதைக்கும் நாடக உரையாடலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. செட்டும் செறிவும் இரண்டுக்கும் அவசியம். நாடகம், அரங்கம் பற்றிய தெளிவான அறிவுள்ள ஒருசிலரே எம்மத்தியில் விமர்சகர்களாக உள்ளனர். ஏனைய

விமர்சகர்கள் நாடகத்தின் உள்ளடக்கம் பற்றி மட்டுமே விமர்சிக்கின்றனர். அதுவும் தெரியாத பலரும் விமர்சனம் எழுதுகின்றனர், இசை, நடனம் என்றால் அவை பற்றி அறிந்தவர் மட்டுமே விமர்சனம் செய்வர். நாடகம் என்றால் அது பற்றிக்கற்றறியாமல் விமர்சிக்கலாம் என்றதொருகருத்து நிலவுகிறது. இதனால் நாடகமும் வளரமுடியாது; விமர்சனமும் வளரமுடியாது. கலைஞர்கள் விமர்சனத்தை மதிக்கவேண்டும். தாமே தமக்கு விமர்சகர்களாக இருப்பதும் மிக முக்கியம். ஒவ்வொரு பார்வையாளனும் கூட ஒருவகையில் விமர்சகன் தான். அதனால்தான் பார்வையாளரின் கருத்தை அறிவதில் பல கலைஞர்கள் இன்று நாட்டம் கொண்டு வருகின்றனர். எவர்களுக்காகக் கலை படைக்கப்படுகிறதோ அவர்களின் கருத்து முக்கியமல்லவா?

● "எந்தையும் தாயும்" என்ற தங்களது நாடகம் ஒருசினிமாவுக்கான வடிவத்தை தனக்குள் அடங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது. சினிமா என்ற ஊடகத்தை தாங்கள் பயன்படுத்தத்தவறியது ஏன்?

□□ சினிமாவில் ஈடுபடுவதானால் நிறையப் பணம் தேவைப்படும். நாடகம் வேறு, சினிமா என்ற ஊடகம் வேறு. அது நிறையவே பொறிமுறைகளோடும் தொழில்நுட்பசாதனங்களோடும் தொடர்புடையதோர் துறை. எமக்கு வாய்ப்பும் வசதியும் அறிவும் இல்லாததுறையோடு ஏன் மினக்கெடவேண்டும்? தொலைக்காட்சிப்பெட்டி (Video) வந்த பின்னர் படமெடுப்பது சற்றுச் சுலபமானதொன்றாகி உள்ளது. இருப்பினும் நமக்கேன் அந்தத் தொல்லை என்று இருந்து விட்டேன் இன்று சிலர் இத்துறையில் ஈடுபடுகிறார்கள். ஆயினும் இங்கு எதிலும் ஒரு சாபக்கேடு இருந்து வருகிறது, முளைவிட முன்னம் கலைஞரை "ஆஹா!" என்று புகழ்ந்து விடுவதால், தம் தலைகளைச் சமநிலையில் வைத்துக் கொள்ளத் தெரியாதவர்கள் தறிகெட்டு, தறுக்கணித்துப்போகிறார்கள். மக்களை இலகுவில், பரந்த அளவில் சென்றடையக்கூடிய இச்சாதனத்தை நாம் பயன்படுத்திக்கொள்வது அவசியம். துறைசார்ந்த அனுபவமும் ஆர்வமும் உள்ளவர்களோடு ஏனைய கலைஞர்கள் சேர்ந்து இத்துறையில் ஈடுபடுவது நல்லது, கூட்டுக் கலைகளான நாடகம், சினிமா என்பவற்றில் முதலில் கலைஞர் கூடிக்கருமமாற்றும் மனிதர்களாக இருக்கவேண்டும், 'தான்தோன்றீஸ்வரர்களால்' எதையும் செய்துவிடமுடியாது.

● ஸ்ரீலங்காவில் சிங்கள நாடகம் வளர்ந்த அளவுக்கு தமிழ்நாட்டில் கூட தமிழ்நாடகங்கள் வளரவில்லை என்ற கருத்து உண்டு. இது பற்றி தங்களது அபிப்பிராயம் என்ன?



□□ இந்த நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. இன்றும் அதுதான் நிலை என்று கூறிவிடமுடியாது. தமிழ்நாடு 1978 இன் பின்னர் விழித்தெழுந்து மெல்ல நவீன நாடகங்களிலும், தேசிய நாடகங்களிலும் ஈடுபாடுகொள்ளத் தொடங்கி, இன்று குறிப்பிடக்கூடிய வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதைக் காணமுடிகிறது. கொழும்பு 1977 இன் பின்னர் நாடகத்துறையில் சற்றுத் தேக்கங்காணத் தொடங்கி, பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் திசைமாறி, பின்னர் மீண்டும் சிறிய அளவில் தன்வழி செல்லத்தலைப்பட்டுள்ளதுபோலத் தெரிகிறது. கொழும்பில் மொழிபெயர்ப்பு நாடகங்களே அண்மைக்காலமாக முன்னணியில் நிற்கிறதாக அறியமுடிகிறது. மொழிபெயர்ப்பு, வளர்ச்சிக்கு நிச்சயம் உதவும். அதேவேளையில் தற்புதுமை நாடகங்களும் அவசியம். குறிப்பிடக்கூடியதற்புதுமை நாடகங்கள் ஒன்று இரண்டு அங்கு தோன்றாமலில்லை.

தமிழீழத்தில் நடைபெற்றுவரும் நாடக முயற்சிகளை நாம் தமிழகத்தோடும் கொழும்போடும் ஒப்பிட்டுப்பார்க்கக்கூடிய நிலையில் இல்லை. கலைகள் வளரவேண்டுமானால் கலைஞர்கள் தமது கண்கள், காதுகளோடு மனங்களையும் திறந்து வைத்துக் கொள்ளவேண்டும். வெளிநாடுகளில் கவிதை, சிறுகதை, நாவல் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் போக்குகளை இங்குள்ள கலைஞர் சஞ்சிகை, நூல் வாயிலாக அறிந்து கொள்கின்றனர், சினிமாவின் வளர்ச்சியையும் படங்கள் மூலம் அறியமுடிகிறது. நாடகங்களின் போக்குகளை அவ்வாறு தரிசிக்கமுடிவதில்லை. இரண்டொரு கட்டுரைகளை வைத்துக்கொண்டு, அங்கு குறிப்பிட்ட நாடகமொன்று எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பதை அறிவது கடினம். அந்நாடகங்களின் வீடியோப் படங்கள் கிடைக்குமாயின் பயன்படும். மேலைநாடுகளில், தமிழகத்தில், கொழும்பில் உள்ளவர்கள் நல்லதரமான, புதிய படைப்புக்களை வீடியோ படமெடுத்து இங்குள்ள கலைஞரின் பார்வைக்காக அனுப்பலாம். இவற்றைப் பார்த்துப் பாவனை செய்வதற்காக அல்ல. நல்ல கலைஞருக்கு, அவை தூண்டுதலாக அமைந்து புதிய பரிமாணங்களை அடைய உதவும். இவை சாத்தியமாகும் வரை இங்கு கலைஞர் என்று தம்மைக்கருதிக் கொள்கின்றவர் கூடிக்கதைக்கவேனும் சித்தமாக இருக்கவேண்டும். யாருடைய படைப்புச் சிறந்தது என்ற போட்டியும், தனிப்பட்டபெருமையும் அல்ல இங்கு முக்கியம். இந்தத் தேசத்தின், மக்களின் உண்மையான சுதந்திரமும், சுபீட்சமும், அமைதியுமே முக்கியமானவை. எமது சுயநலம், பாசாங்குகள். அனைவரையம் படுகுழியில் தள்ளிவிடும். படைப்பின் வெற்றிக்காக கலைகள் படைக்காது, கொண்ட இலட்சியத்தின் உயர்வுக்காக கலைகள் படைத்தால், அப்படைப்புக்கள் நிச்சயம் வெற்றிபெறும். அதற்கு கலைஞனின் நேர்மை ஒன்றே அவசியம். □□

**வெளிச்சம்**

**கலை, இலக்கிய சமுக இதழ்**

**வெளியீடு:**

**விடுதலைப் புலிகள்**

**கலை, பண்பாட்டுக்கழகம்**

**உருவாக்கம்:**

**ஆசிரியர் குழு**

**ஓவியங்கள்:**

**தயா**


**இதழ் அமைப்பு:**

**இணுவையூர்**

**சிதம்பரதிருச்செந்திநாதன்**

**அச்சு:**

**ம. மரியதாஸ்**



## மதிப்பீட்டுரை

# கடலிலே காவியம் படைப்போம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

நெய்தல் நில மக்களின் நெஞ்சத்து உணர்வுகளுக்கு மெட்டுக்கட்டி கடற்புலிகளின் வீரத்துக்குப் பாட்டுக்கட்டி, ''கடலிலே காவியம் படைப்போம்'' என்னும் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளிவருகின்றது. நெய்தல் நில மக்களுடைய சோகத்தை ஏற்கெனவே தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடாகிய ''நெய்தல்'' என்னும் பாடல் ஒலிப்பதிவு நாடாமூலம் நன்கு உணர்ந்தோம். கடற்புலிகளின் வீரமும், அவ்வீரம் தீர்த்துவைத்த சோகமும் பற்றிக் கலை, பண்பாட்டுக் கழகத்தின் இந்த வெளியீடாகிய ''கடலிலே காவியம் படைப்போம்'' ஒலிப்பதிவு நாடாப் பாடல்கள் விரித்துக் கூறுகின்றன. இந்த ஒலிப்பதிவு நாடாவுக்கு ஒரு சிறப்புண்டு. அது என்னவெனில், இந்த மண்ணிலே முதன்முதலாகக் கணனியைப் பயன்படுத்தி இப்பாடல் ஒலிப்பதிவு நாடா தயாரிக்கப் பட்டமையேயாகும்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை, கவிஞர் வாஞ்சிநாதன், பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் பாடல்களை இயற்றியுள்ளனர். பெரும்பாலும் நல்ல கவிதைகள் நல்ல இசைப்பாடல்களாகி விடுகின்றன. நல்ல கவிதையாக அமையாவிட்டால், அது நல்ல பாட்டாகவும் ஆகிவிடமுடியாது. இந்த ஒலிப்பதிவு நாடாவிலே எல்லாப் பாடல்களுமே நன்றாக அமைந்துவிடுகின்றன.

> இந்தக் கடல் ஈழத்தமிழரின் சொந்தக்
> \- கடல்
> இங்கு ரத்தம் சிந்திச் சிவந்திடும் தந்தைக்
> \- கடல்
> பொங்கிப் பகை வெல்லக்கடற்புலி
> \- போகுங்கடல்
> பிரபாகரன் தோன்றிய ஊரைத் தழுவிடும்
> \- வீரக்கடல்

என்று புதுவை இரத்தினதுரை எழுதிய பாடலிலே ''பிரபாகரன் தோன்றிய ஊரைத் தழுவிடும் வீரக்கடல்'' என்ற அடியும்,

> நிலவற்ற வானத்தில் வெள்ளி சிரிக்கும்
> \- அந்த
> நீலக்கடல் இருளினிலே பொங்கிக்
> \- கொதிக்கும்
> அலை மேலே எங்களின் பயணம் நடக்கும்
> \- வள்ளம்
> அக்கரையில் சேருமட்டும் ஆவிதுடிக்கும்

என்று பண்டிதர் பரந்தாமன் எழுதிய பாடலிலே ''வள்ளம் அக்கரையில் சேருமட்டும் ஆவிதுடிக்கும்'' என்ற அடியும்,

> சத்தமிட்டு முத்தமிடும் வாடைக்காற்று
> \- வந்து
> சுத்திச் சுத்திக் கடல்மீது கோலம்போடும்
> தத்தித் தத்திப் படகொன்று பயணம்
> \- போகும் - இருள்
> நித்தம் நித்தம் விழியோடு கதைகள் பேசும்

என்று வாஞ்சிநாதன் எழுதிய பாடலிலே 'தத்தித் தத்திப் படகொன்று பயணம் போகும்'' என்ற அடியும் கவிதை ஓவியங்

களாக அமைந்துவிடுகின்றன. இப்படியான பல கவிதை ஓவியங்களைக் கொண்ட பாடல்களுக்குத்தான் இந்த மண்ணிலே மிகச் சிறந்த இசையமைப்பாளராகிய கண்ணன் இசைவழங்கியுள்ளார்.

பாடல்களின் பொருளுக்கேற்றபடி இசை வழங்கப்பட்டுள்ளது. இந்த நாடாவின் இரண்டாம் பகுதியிலுள்ள மூன்றாம் பாடல் முதலிற் சோகத்தையும் பின்னர் வீரத்தை யும் புலப்படுத்துகின்றது. அதற்கேற்றபடி இசையமைக்கப்பட்டுள்ளது. முதலிலே, கிளாலிக் கடலிலே கடற்படையினரால் மக்கள் பட்ட இன்னல்கள் கூறப்படுகின் றன. மூன்று பாட்டுருக்கள் இவ்வின்னல் களைக் கூறுகின்றன. வாத்தியக் கருவிக ளெல்லாம் கசிந்து அழுகின்றன. இச் சோகப் போக்கினை இடைநிறுத்தி வீரமும் பரபரப்புமுள்ள இசை வழங்கப்படுகின்றது. பல படகுகள் வேகமாக வருகின்றன என்ற உணர்வை இசை தோற்று விக்கின்றது. மக்களுக்குத் துன்பஞ் செய்தவர்களை விரட் டியடிக்கக் கடற்புலி வருகின்றது. ''ஏலே லோ ஏலே லோ ...'' என்ற தருவுடன்

*''நாகதேவன்துறை நீங்கள் வந்து*
*- ஆளவோ - நாங்கள்*
*நடுக்கடலில் துடிதுடித்து வெந்துமாளவோ*
*வேக ஓடம் உங்கள் கையில் இனியும்*
*- ஆகுமோ - கடல்*
*வேங்கைவர எங்கே போனவோ''*

என்ற பாடல் ஒலிக்கின்றது. கேட்பவர்கள் உண்மையிலே பரவசம் அடைவார்கள். வீர உணர்வு பொங்க நிமிர்ந்து நிற்பார்கள்.

இந்த ஒலிப்பதிவு நாடாவுக்கு இன் னொரு உயர் பண்பும் உண்டு. அதாவது விடுதலைப் புலிகள் கடலிலே சாதனைகள் செய்ய மழையென்றும் காற்றென்றும் பாராமல், தாய் பிள்ளை தாரமென்று பாராமல் கடலிலே படகுகளை ஓட்டிய ஓட்டிகளுக்கு நன்றி கூறுவதாகப் புதுவை இரத்தினதுரை இயற்றிய பாடல் இதில் சேர்க்கப்பட்டுள்ளமையேயாகும்.

*ஓட்டிகளே படகோட்டிகளே - எங்கள்*
*உணர்வினிற்கேவழி காட்டிகளே*

என்று தொடங்கும் பாடல் மனதை உருக்குவதாக அமைகின்றது. தொழில் செய்பவன், தன் தொழிலுக்குரிய கருவி களுக்கு நன்றிகூறுவதாகப் பல நாட்டார் பாடல்களுண்டு. இந்தப் பாடலும் அந்த வகையைச் சார்ந்ததே.

கண்ணனுடைய இசையமைப்புக் கடற் புலிகளின் வீரத்தையும் நெய்தல் நிலத்தின் சோகத்தினையும், வெற்றியினால் ஏற்படும் களிப்பினையும் புலப்படுத்தும் வகையிலே அமைந்துள்ளது. சிட்டு, சாந்தன், சுகுமார், விஜயலட்சுமி, நிரோஜன், விஜயகுமார், ஸ்ரனிசிவானந்தன் ஆகியோர்களுடைய குரல்கள் ஏற்ற வகையிலே இசையுடன் இசைவுறுகின்றன. விஜயலட்சுமி 'வெள்ள லையே நில்லலையே வேதனையைக் கேள லையே'' என்ற பாடலைப்பாடும் போது அவருடைய குரல் சோகத்துடன் இழை கின்றது. பக்கவாத்தியக் கலைஞர்களெல் லாம் தக்கமுறையிலே இசைக்கு அணிசெய் துள்ளனர்.

இசையும் கவிதையும் இணைகின்ற போது ஏற்படும் கவிக்கோலங்களை இந்த ஒலிப்பதிவு நாடாவிலே தரிசிக்கலாம் நெய் தலின் சோகத்தினை,

*''காலை விடிகின்ற வரையும்*
*நீரில் மிதக்கின்றோம்*
*காற்றுடனே போர்தொடுத்து*
*ஊர் திரும்புகின்றோம்''*
*''பாய்விரித்து ஓர் இரவு*
*மீன்பிடித்தான் பிள்ளை*
*பத்துமாதம் போனதையா*
*ஏன்திரும்ப வில்லை.''*

என்னும் அடிகள் உணர்த்த, நெய்தலின் அழகினை

*''நிலவற்ற வானத்தில் வெள்ளி சிரிக்கும்''*

என்னும் அடி உணர்த்துகின்றது. நெய்த லின் உழைப்பும் மனநிறைவும்

*''சின்னவலை போட்டுக் கைகள்*
*- சிவந்து போகும் - கருங்*
*கண்ணிபடக் கவலையெல்லாம*
*- மறைந்துபோகும்.''*

□□

# காட்டு அன்னங்கள்

## பிரம்மஞானி

சீனாவில், அறுபதுகளில் அந்தப் புரட்சி நிகழ்ந்தது. புரட்சிக்குப் பின் ஒரு புரட்சியாக, தொடர் புரட்சியாக, பழைமையை மாற்றியமைக்கும் பண்பாட்டுப் புரட்சியாக அந்தப் பூகம்ப நிகழ்வு இடம் பெற்றது. அது விளைவித்த பேரனர்த்தம் பயங்கரமானது. நாடு முழுவதுமே ஒரு வன்முறைப் பிரளயத்தில் மூழ்கி எழுந்தது. அந்தப் புரட்சிப் பெருவெள்ளத்தில் அள்ளுப் பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காது. அது சீன கம்யூனிச இயக்கத்தை ஒரு உலுப்பு உலுக்கியது. வேர் அறுந்து விழுந்த விருட்சங்கள்போல கட்சியின் பழம் பெரும் தலைவர்கள் தூக்கி எறியப்பட்டனர். சீன சோசலிச நிர்மாணம் ஒரு இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டது. முன்னோக்கி நகர்ந்து வந்த செஞ்சீனம், இந்தக் கால கட்டத்தில். ஒரு பெரிய பின் நோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தியது.

இந்த ஊழிக் கூத்தை நடத்தி முடித்தவர் மாவோ. எதற்காக இந்தப் புரட்சியை அவர் கட்டவிழ்த்துவிட்டார்? தான் கட்டி வளர்த்த கட்சியையே அவர் எட்டி உதைத்ததன் காரணமென்ன? தேசிய விடுதலைப் போரில் தோளோடு தோள் நின்ற தோழர்கள் பலரை அவர் இம்சைப்படுத்தியதன் நோக்கமென்ன? பெரும் புயலாக எழுந்து பேரழிவைத் தோற்றுவித்த இந்த அரசியற் கொந்தளிப்பை பண்பாட்டு புரட்சி என அவர் வர்ணித்தது ஏன்?

நீண்ட காலமாகவே சோசலிச சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பிய வினாக்கள் இவை.

'முன்நோக்கிய பெரும் பாய்ச்சல்', 'பண்பாட்டுப் புரட்சி', என்பன மாவோ நிகழ்த்திய சமூகப் பரிசோதனைகள். இந்தப் பரிசோதனைகளின்போது பெரும் தவறுகள் இழைக்கப்பட்டன என்பதும், இவற்றினால் சீனச்சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகள். இன்றைய சீனத்தலைமை மாவோவின் இந்த பரிசோதனைகளை விமர்சித்து கண்டித்தும் இருக்கிறது. ஆனால் மாவோவை நிராகரிக்கவில்லை. நவ சீனத்தின் உருவாக்கத்தில் மாவோவின் பங்கு அளப்பரியது. தேசிய விடுதலையிலும், சமூகப் புரட்சியிலும் அவர்கணிசமான தொண்டாற்றியிருக்கிறார். சீனாவின் சிற்பி என வர்ணிக்கப்பட்ட இந்த மாபெரும் வரலாற்று மனிதர், ஏன் இந்த பாரிய தவறுகளை இழைத்தார்?



நூலாசிரியை
யுங் சாங்
(JUNG CHANG)

மாவோவின் இலட்சியங்கள் உன்னத மானவை. ஆனால் இந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட அணுகு முறைகள்தான் தவறானவை என்பது சீன ஆய்வாளர்கள் பலரது கருத்து. அவர் முற்றுமுழுதாக மனித சக்தியைப் பயன் படுத்தி தனது இலக்குகளை அடைய முனைந் தார். ஆனால் இதனை ஒரு ஒழுங்கான முறையில், நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டத்தின் அடிப்படையில் செய்ய வில்லை. இதனால் சீன சமூகம் பெரும் துன்பத்திற்கு ஆளாகியது. பொருண்மிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

கலாச்சாரப் புரட்சியை அவர் தொடக்கி வைத்ததற்கும் காரணங்கள் இருக்கத்தான் செய்தன. கொள்கையளவில், இந்தப் பரிசோதனை உயரிய நோக்குகளை கொண் டிருந்தது. ஆனால் நடைமுறை எதார்த்தம் வேறு. நடைமுறையில் அது பேரழிவை தோற்றுவித்தது.

மாவோ ஒரு இலட்சியவாதி. பெரிய கனவுகளைக் கண்டவர். சீனத்தை ஒரு சோசலிச சுவர்க்கமாக மாற்ற விளைந்த வர். சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையில் அவர் செல்ல விரும்பவில்லை. அந்தப் பாதை கட்சிச் சர்வாதிகாரத்தை கட்டி வளர்த்தது. மக்கள் சனநாயகத்தை மறுத்தது. பொருளுலகிற்கு முதன்மை கொடுத்தது. மனித உறவுகளை மலினப் படுத்தியது. அந்தப் பாதை ஒரு உன்னத மான பொதுவுடமை சமூகத்தை நோக்கிச் செல்லவில்லை என மாவோ கருதினார். சீனத்தை ஒரு புதிய பாதையில், ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்த்திச்செல்ல அவர் விரும்பினார்.

பொதுவுடமைச் சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை எட்டிவிட முடியாது. ஒரு புரட்சி யுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண் பாடுகளையும் களைந்துவிடமுடியாது. படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான புரட்சிமூலமே கம்யூனிச சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் எனக் கருதினார் மாவோ. இந்தத் தரிசனத்தின் அடிப்படையில் புதிய சமூகப் பரிசோதனை களை அவர் நிகழ்த்த விரும்பினார் மக்களை விழிப்புறச்செய்து, மனித உறவுகளை மேம் பாடுசெய்து, மக்கள் சனநாயகத்தை கட்டி வளர்க்கும் புதுமையான வழிமுறைகளா கவே இந்தப் பரிசோதனைகளை அவர் முன் னெடுத்தார். அவரைப் பொறுத்தவரை, சீன பண்பாட்டுப் புரட்சியானது பொதுவு டமைச் சமூகக் கட்டமைப்பை நோக்கிய ஒரு புதிய நகர்வு.

பொருண்மிய கட்டமைப்பை மாற்றிய மைத்தால், மனவுலக மாற்றத்திற்கும் அது வழி வகுக்கும் என்ற வைதிக மார்க் சியக் கருத்தை மாவோ ஏற்கவில்லை. பொருளுலகம் கருத்துலகை முற்றாக நிர்ண யிப்பதல்ல. காலம் காலமாக மனவுலகில் வேர் பதிக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள் சமூகப் புறநிலை மாற்றத்தால் மறைந்து விடுவதல்ல. கருத்துகளை மாற்றுவதற்கு கருத்துலகில் ஒரு புரட்சியை நிகழ்த்த வேண்டும். சிந்தனைப் புரட்சிமூலமே புரட்சி கரப் பிரக்ஞையை தோற்றுவிக்கமுடியும் எனக் கருதினார் மாவோ. சீனாவில் சமூகப் புரட்சி நிகழ்ந்து, பொருண்மியக் கட்ட மைப்பில் மாற்றம் ஏற்பட்டபோதும், மக்க ளின் மனவுலகில் மாற்றம் நிகழவில்லை. பழமைவாதக் கருத்துகள், பிற்போக்கான பார்வைகள், மூடநம்பிக்கைகள் மக்களிடம் செறிந்து கிடந்தன. கொன்பியூசியஸின் ஆதிகால அடிமைவாதச் சித்தாந்தம் சீனச் சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தி நின் றது. இந்தப் பழமைவாத சமூகப் பிரக் ஞையுடன புதிய சமூக உலகை கட்டி எழுப்புவது கடினம். பொருளியப் புற வளர்ச்சிக்கு ஒத்திசைவாக அக வளர்ச்சியும் ஏற்படவேண்டும். புதிய யுகத்தை நோக்கி முன்னேறும் ஒரு சமூகம், புரட்சிகரமான அறிவியற் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். பண்பாட்டுப் புரட்சி மூலம் இந்த

நோக்கை அடையலாம் என மாவோ கருதினார்.

சோவியத் யூனியன் போன்று, சீனாவிலும் கட்சிச் சர்வாதிகாரம் விஸ்வரூபப் பரிமாணம் பெறுவதை மாவோ விரும்பவில்லை. மக்களுக்குப் புறம்பாக, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக அரச நிர்வாக இயந்திரம் உருவாக்கம்பெறுவதை அவர் விரும்பவில்லை. அது, கட்சிக்கும் மக்களுக்குமிடையே பெரியதொரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இந்த முரண்பாட்டைக் களைவதானால் அதிகாரபீடத்திலுள்ள கட்சிக்காரர்களை மக்கள் அரங்கில் இறக்கிவிடவேண்டும். மக்கள்மீது அதிகாரம் செலுத்துவதல்ல, மக்களுக்கு சேவை புரிவதுதான் கட்சியின் இலட்சியம் என்பதை உணர்த்தவேண்டும். இந்த நோக்கிலும் பண்பாட்டுப் புரட்சியை முடுக்கிவிட்டார் மாவோ.

இளைய நெஞ்சங்கள் மிகவும் செழிப்பான நிலம். புரட்சியின் விதைகளை அங்குதான் விதைக்கவேண்டும். இளைஞரிடம் புரட்சியுணர்வு இருக்கிறது, புதுமையைக் காணும் உத்வேகம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. தூய்மை இருக்கிறது. எந்த ஒரு போராட்டத்திலும் வலுவான சக்தியாக, துணிவாக நின்று போராடுவது இளம் சமூகமே. எனவேதான், இளம்பரம்பரையை அணிதிரட்டி, அவர்களை 'செம்படை' எனப் பெயரிட்டு. அவர்களுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி, பழைமைக்கு எதிராக, பழைமையில் புதைந்து கிடக்கும் கட்சியின் பழம்பரம்பரைக்கு எதிராக பண்பாட்டுப் புரட்சியை அரங்கேற்றிவைத்தார் மாவோ.

மாவோவின் இலட்சிய நோக்கு உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால், பண்பாட்டுப் புரட்சி இந்த நோக்குகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, பேரழிவையே விளைவித்தது.

சீன பண்பாட்டுப் புரட்சிபற்றி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மார்க்சிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணத்தில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியேயிருந்து சீனம் பற்றி பார்க்கப்பட்ட பார்வைகள். உள்ளார்ந்த அனுபவமின்றி நிகழ்த்தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால் சீனாவிலிருந்து, சீன வரலாற்றுத் தரிசனத்துடன் எழுதப்பட்ட நூல்கள் மிகவும் சொற்பம். இந்த வகையில், யுங் சாங் எனப்படும் சீனப் பெண்மணி எழுதியுள்ள 'காட்டு அன்னங்கள்; சீனாவின் மூன்று புதல்விகள்' *(WILD SWANS; THREE DAUGHTERS OF CHINA)* என்ற நூல், சீனப் பண்பாட்டுப் புரட்சியின்போது நிகழ்ந்த அனர்த்தங்களை, சுய அனுபவப் பார்வையில் தத்துருபமாக சித்தரிக்க முனைகிறது.

இருபதாம் நூற்றாண்டின் சீன வரலாறு மிகவும் சிக்கலானது. நீண்டது. மிகவும் கொந்தளிப்பானது. ஜப்பானின் ஆதிக்க பிடிக்குள் சிதைந்துகிடந்த சீனம், நிமிர்ந்து எழுந்து போராடி, மிகவும் பலம்பொருந்திய பொதுவுடமை சமூகமாக தன்னை நிலை நிறுத்திக்கொண்ட ஒரு யுக வரலாறு. இப்படியானதொரு நீண்ட, புரட்சிகர நிகழ்வுகளைக்கொண்ட சிக்கலான வரலாற்றுப் பின்புலத்தில் மூன்று பெண்களின் சுயசரிதம் பதியப்படுகிறது. தனது பாட்டி, தனது தாய், தன்னுடையதாக, மூன்று பரம்பரையை உள்ளடக்கி, தனது குடும்பத்தின் வாழ்வனுபவத்தை தேசத்தின் அகன்ற வரலாற்றனுபவத்துடன் பின்னிப் பிணைத்து இந்த சுயசரித ஆக்கத்தைப் படைத்திருக்கிறார் நூலாசிரியை.

எழுநூறு பக்கங்களைக்கொண்ட பெரிய நூல். நீண்டதொரு சமூக நாவல்போன்று கதை நகர்த்தப்படுகிறது. சீனச் சமூக வாழ்வும், அதில் இழையோடும் சமூக உறவுகளும், அந்த உறவுகளைத் தாங்கிவரும் பாத்திரங்களும், அந்தப் பாத்திரங்கள்

வெளிப்படுத்தும் நுண்ணிய மனவுணர்வுகளும், ஏக்கங்களும் மிகவும் நுட்பமாக சித்தரிக்கப்படுகிறது. ஒரு தேசத்தின் வரலாற்றுப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தின் கதை சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி இந்த நூலின் மையமாக அமைகிறது. இந்தக் கலாச்சாரக் கிளர்ச்சி விளைவித்த அனர்த்தங்களையும், அதனால் சீன சமூகம் சந்தித்த அவலங்களையும். உண்மைச் சம்பவங்கள் வாயிலாக மிகவும் உணர்வுபூர்வமாக வரைந்துகாட்டுகிறார் யுங் சாங்.

காட்டுத் தீ போல பண்பாட்டுப் புரட்சி நாடெங்கும் பரவுகிறது. அதன் தீ நாக்குகள் யுங் சாங்கின் குடும்பத்தையும் தீண்டுகிறது.

> இளைய நெஞ்சங்கள். மிகவும் செழிப்பான நிலம். புரட்சியின் விதைகளை அங்குதான் விதைக்க வேண்டும். இளைஞரிடம் புரட்சியுணர்வு இருக்கிறது. புதுமையைக் காணும் உத்வேகம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. தூய்மை இருக்கிறது. எந்த ஒரு போராட்டத்திலும் வலுவான சக்தியாக, துணிவாக நின்று போராடுவது இளம் சமுகமே.

நூலாசிரியையின் தந்தை ஒரு கம்யூனிஸ்ட் உயரதிகாரி. நீண்ட, கடின உழைப்பால் உயர்ந்தவர். கெரில்லா வீரனாக ஆயுதமேந்தி தேசிய விடுதலைக்காக போரிட்டவர். கட்சியின் விசுவாசி. மாவோவை சீனத்தின் கடவுளாக வரித்துக்கொண்டவர். தாயாரும் ஒரு புரட்சிவாதி. கட்சிப் பிரமுகர். யுங் சாங்கின் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட்குடும்பம்.

கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டுவைக்கவில்லை. யுங் சாங்கின் பெற்றோர்கள்மீது ‘எதிர்ப் புரட்சியாளர்’ என்ற குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின்னர் தயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு, கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு, தடுப்பு முகாம்களில் வதைபட்டு, பெற்றோர்கள் கொடுமைக்கு ஆளாக யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்கு பைத்தியம் பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங் சாங். அந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கிறது. தனிப்பட்ட சோகமும், சமூகத்தின் அவலமும், தன்னைச் சூழ நிகழ்ந்துகொண்டிருக்கும் அராஜகமும் – எல்லாமே அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக்கூத்தாக அவருக்கு தென்பட்டது.

கட்டுக்கடங்காத காட்டாறுபோல சீற்றம்கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவை ஏற்படுத்தியது. இலக்கற்ற, நோக்கற்ற இளைஞர் வன்முறையால் எத்தனையோ அப்பாவிகள் பழிவாங்கப்படுகின்றனர். யுங் சாங்கின் கண்முன்னே இந்தக் கொடுமை நடக்கிறது. பழமைவாதிகள் என்றும், துரோகிகள் என்றும், எதிர்ப் புரட்சியாளர் என்றும் முதலாளித்துவப் போக்காளர் என்றும்,

பிற்போக்குப் புத்திஜீவிகள் என்றும், பலர் வேட்டையாடப்பட்டு இம்சைப்படுத்தப் பட்ட சோக நிகழ்வுகளை அவர் மிகவும் உருக்கமாக எழுதுகிறார்.

பண்பாட்டுப் புரட்சி, மனிதர்களை மட்டுமன்றி உடைமைகளையும் விட்டு வைக்கவில்லை. நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அரும் பழம்பொருட்கள் என்ற வகையில் பழைமையைச் சித்தரித்த பண் பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே நாச மாக்கப்பட்டன. கலையம்சம் பொருந்திய பல புராதனக் கட்டிடங்கள்கூட இடித்து தகர்க்கப்பட்டன. மார்க்சிய நூல்கள், மாவோவின் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புகள், பழம்பெரும் இலக்கியங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள், மேலைநாட்டு நூல்கள் எல்லாமே பண்பாட்டுப் புரட்சித் தீயில் பொசுக்கப்பட்டதாக கூறுகிறார் நூலாசிரியை. புத்தகங்கள் மலைமலையாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட கோரக் காட் சிகள் யுங் சாங்கின் ஆன்மாவைச் சுட்டு விடுகிறது. பண்பாட்டுப் புரட்சி, சீன கலாச் சாரப் பொக்கிஷங்களையே அழித்துவிட்ட தாக அவர் மனம்வெந்து எழுதுகிறார். இந்தக் கோரத் தாண்டவத்தை நிகழ்த்திய சீன தலைமைமீது அவருக்கு கோபாவேசம் பொங்குகிறது. மாவோமீது முழுப் பழியை யும் சுமத்துகிறார்.

பண்பாட்டுப் புரட்சியை தொடக்கி வைத்தவர் மாவோ. அதனை இயக்கி வைத்தவரும் அவரே. எனவே, இந்தப் புரட்சியால் நிகழ்ந்த அராஜகம் அனைத் திற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மாவோ சாதிக்க விரும்பியது வேறு. ஆனால் நிகழ்ந்தது வேறு. அந்த நிகழ்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் கட்டுப்பாடான கட்சி அமைப்பிற்கு எதிராக, கட்டுப்பாடற்ற இளைஞர் சேனையை கட்டவிழ்த்துவிட்டது அவர் புரிந்த மாபெரும் வரலாற்றுத் தவறு. கடிவாளம் அறுந்த குதிரைபோல திசைமாறி ஓடியது செம்படை. அதனை நெறிப்படுத்த அவரால் முடியவில்லை. பழைமைவாத சிந்தனையை களைந்தெறிய மாவோ விரும்பினார் என்பது உண்மை. ஆனால் நூல்களை எரிக்கவோ, அன்றிப் பழைய பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கவோ அவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் செம்படையோ, மாவோவின் பிரகடனங்களை தவறாகப் புரிந்துகொண்டு, தான்தோன்றித்தனமாக நடந்தது. ஆயினும் அணைகளைக்கட்டா மல் வெள்ளத்தை ஓடவிட்டது மாவோ இழைத்த தவறு.

சீன சோசலிச நிர்மாணம்பற்றிய ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங் சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒருபுறம் ஆழமான சோகமும், மறுபுறம் வக்கிர மான கோபமும் தொனிக்கிறது. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும், கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்கு கம்யூனிசத் தின்மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் கசப்புணர்வு சீன சமூகம்மீது திரும்புகிறது. செஞ்சீனத்தின் முகம் அவருக்கு அசிங்கமாகத் தென்படுகிறது. போராலும், புரட்சியாலும், கொந்தளிப் பான அரசியலாலும் சீர்குலைந்த ஒரு சமுதாயமாக அவர் சீனத்தைக் காண் கிறார். இந்தப் பார்வையின் அடிப்படை யில், சீன வரலாற்றை ஒரு நீண்ட, முடி வில்லாத துன்பியல் நாடகமாக அவர் சித்தரிக்க முனைகிறார்.

ஆன்மாவை இழந்த மனிதர்களாக, எதற்கும் பணிந்துகொடுக்கும் பொம்மைக ளாக, சீன விவசாயிகளை அவர் விபரிக் கிறார். இது மிகவும் தவறான கணிப்பு. ஒரு அபத்தமான பார்வை. சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு. ஜப்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக, சீன பிரபுத்துவக் கொடுமைக்கு எதிராக, தேச விடுதலைவேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள் சக்தியை யுங் சாங் இழிவுபடுத்த

முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக்காட்டுகிறது. நகரப் புற வாழ்வும், உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு தீட்சண்யமற்ற நோக்கிற்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன, வாசிப்பதற்கு நிறையப் புத்தங்கள் இருக்கின்றன, பார்த்து ரசிக்கப் பூக்கள் இருக்கின்றன, பொழுதுபோக்கிற்கு களியாட்டங்கள் இருக்கின்றன, என்றெல்லாம் மிகவும் சிறுபிள்ளைத்தனமாக எழுதுகிறார். மேற்குலக நாகரீகம் உயர்ந்தது என்று சொல்கிறார். மேற்குலகில் பண்பு இருக்கிறது, அன்பு இருக்கிறது, காருணியம் இருக்கிறது, வன்முறை அகன்ற மென்முறை இருக்கிறது, அமைதி இருக்கிறது, வர்க்க வேறுபாடற்ற சகோதரத்துவம் இருக்கிறது, என்றெல்லாம் அவர் எழுதுவதைப் பார்க்கும்பொழுது வேடிக்கையாக இருக்கிறது. மேற்குலகில் நிலவும் சமூக முரண்பாடுகளையும், சீர்கேடுகளையும் வன்முறைகளையும் அவர் கண்டு கொள்ளாதது வியப்பாக இருக்கிறது. அத்துடன உலக காலனித்துவ வரலாற்றையும், இந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றையும் அவர் செம்மையாகப் படிக்கவில்லை எனத் தோன்றுகிறது. சீனம் ஒரு பெரிய பூதம், மஞ்சள் பூதம், ஆபத்தானபூதம், அதனை நிரந்தரத் தூக்கத்தில் வைத்திருப்பது அவசியமென மேற்குலகம் சீன மக்களிடையே அபின போதையை ஊக்குவித்த வரலாற்று நிகழ்வுகள் எதுவும் அவருக்கு தெரியாதுபோல. குருட்டுத்தனமான மேற்குலக மோகம், நாட்டுப் பற்றை அவரிடம் மழுங்கடித்துவிட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டைவிட்டு ஓடி லண்டனில் தஞ்சம்புகுந்திருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும். அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத் தேவைப்படாது. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்கு பயன்தரக்கூடியது.

□□

தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை.

# லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவில் நனைவோம்.



ஆதிக்கமேகங்கள் எம்மண்ணில் கருக்கொண்டு நெருப்பு மழை பொழிய நினைத்த போது, விடுதலைப் புயலாகப் புகுந்து மேகங்களைக் கலைத்த வீரன். தமிழீழம் எவருக்கும் கைகட்டி, வாய் பொத்தி, சேவகம் செய்யாது என்று உலகத்திசையெங்கும் உரத்துச் சொன்ன உத்தமன்.

மக்களின் விடுதலைக்காக பட்டினித்தீயில் படுக்கை விரித்து தீக்குளித்த திலீபன்.

*அவனின் நினைவுடன் தொடரும் எம் பணிகள்*

*— வெளிச்சம்*

பெயின்ற் வகைகள்
அச்சுவேலைகளுக்குரிய
காகிதாதிகள், மை வகைகள்,
அலுவலக உபகரணங்கள்
ஆங்கில மருந்து வகைகள்
இன்னும் பல......

எல்லாவற்றையும்

மொத்தமாக பெற்றுக்கொள்ள

# புஸ்பா & கோ

மொத்த வியாபாரிகள்
293, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.